தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு

துணர்	திருவள்ளுவர் யாண்டு ௲௯௱௯௨	மலர்
	பிலவ, தை.	
௩௭	1962 ஜனவரி, பிப்ரவரி.	௰

தமிழ்க் கவிதை

திரு. நா. அறிவு ஒளி

பெண்கள், குழந்தைகள், பூக்கள், கலைகள், இலக்கியங்கள், இயற்கை ஆகியவற்றைச் சுவைக்கும் போது ஆர்வமும் அன்பும் அனைவருக்கும் உண்டாகின்றன. வாழ்க்கையில் உண்டாகும் துன்பத்தையும் சோர்வையும் போக்கி, இன்பத்தையும் ஆறுதலையும் நல்குபவை இவை. தூய உணர்ச்சிகளோடு நம்மை ஆட்சி புரியும் ஆற்றல் சான்றவை இவை. இவற்றை வெறுத்தால்; உலகில் விரும்பக் கூடியன வேறு என்ன உள்ளன?

உள்ளம் ஆறுதலை நாடுவது இயற்கை. உடல் சோர்வதைப் போலவே உள்ளமும் சோர்வடைகிறது. நாடி நரம்புகள் களைப்பதைப் போன்றே அக உணர்வுகளும் களைப்படைகின்றன. உடல் களைப்பை மாற்ற ஓய்வும் உணவும் பயன்படுகின்றன. அக உணர்வின் களைப்பை மாற்றக் கலைகளும், இலக்கியங்களும், விளையாட்டுக்களும் பயன்படுகின்றன.

அக உணர்வை ஆறுதல் செய்ய இருவழிகள் உள்ளன. அறிவுக்கு விருந்தளித்து உள்ளத் துணர்வைத் தூண்டி ஆர்வமூட்டி இன்புறுத்துவது ஒருவகை. மனக்கிளர்ச்சியை மூண்டெழச் செய்து அந்த வெறிப்பில் களைப்பாறுவது இன்னொரு வகை. முன்னது பண்பாளரும் அறிஞரும் போற்றுவது. பின்னது எளியோரும் தாழ்ந்தோரும் கடைப்பிடிப்பது.

அறிஞரும் பண்புடையோரும் போற்றும் ஆறுதலளிக்கும் கலைகளுள் 'கவிதைக் கலை' தலைசிறந்ததாகும். ஏனைய நுண் கலைகளுக்கு உள்ள அனைத்துத் திறனும் ஆற்றலும் கவிதைக் கலையிடம் அமைந்துள்ளன. அதுமட்டுமின்றி ஏனைய கலைகளைப் பருப்பொருள்வழி நேரிடையாகவே சுவைத்தின்புற

வேண்டும். ஆனால், கவிதைக்கலை நுண்பொருள் வாயிலாக உள்ளத்தாலேயே சுவைத்தின்புறக் கூடியது. பிற கலையைச் சுவைக்க எவ்வாற்றானும் பிறர்துணை வேண்டும். ஆயின், கவிதையை இயற்றிவிட்டபின். எவர் துணையுமின்றி நாமே நமக்குள் நினைக்குந் தோறும் சுவைத்து இன்புறலாம்.

அரும் பண்புகளுக்கு நிலைக்களமான கவிதைத் துறையில் தமிழ் மொழி பெற்றிருக்கும் வளமை கண்டு பிறமொழியாளர் களே பேரளவில் பொறாமைப்பட்டிருக்கின்றனர் இத்தகு வளமார்ந்த தமிழ்க் கவிதையின் வாழ்வு பல்லாயிரக் கணக் கான ஆண்டுகளாக ஆயிரக்கணக்கான வழிமுறைகளைப் பெற்று வளர்ந்து வருகிறது.

சங்க காலக் கவிதை வாழ்வு ஓர் ஒப்பற்ற எழிற் பேரின்ப உலகமாக விளங்குகிறது. சங்க காலத்திற்குப் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டது தொல்காப்பிய காலம்; அவ்வரும் பெரும் எழில் இலக்கணமான தொல்காப்பியத்தில் 'செய்யுளியல்' என்ற தனிப் பகுதியில் தொல்காப்பியர் கவிதை இலக்கணத்தை மிக விரிவாகவும், ஆழமாகவும், நுண்மையாகவும் ஆராய்ந்து ஒப்பற்ற இலக்கணங்களை வகுத்திருக்கக் காண்கிறோம். இற்றைக்கு ஆறாயிரம் ஆண்டு களுக்கு முற்பட்டதான தொல்காப்பியத்திலேயே கவிதை இலக்கணம் இவ்வளவு விரிவுடையதாக விளங்குகின்ற தெனின்; அதற்குமுன் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே பல இலக்கிய, கவிதை நூல்கள் விளங்கியிருக்க வேண்டும். தொல்காப்பியர் தம் காலத்திலும், தமக்கு முன்பு இருந்த பல இலக்கண நூல்களைக்கற்று, அவற்றிலிருந்தும் பல கருத்துக் களை, மரபுகளைத் தம் செய்யுளியலில் எடுத்து ஆண்டுள்ளார். அவ்வாறாயின், தொல்காப்பியருக்கு முன்னேர பல யாப் பிலக்கணங்கள் இருந்தமை தெளிவாகிறது.

இவ்வண்ணம் தமிழிலக்கிய வானத்தின் பரப்பை அறிந் துணர இயலா வண்ணம் பெருமையும் அருமையும் அமைந்த பெருவாழ்வு அமைந்துள்ளமையைக் காண்கிறோம்.

பல்லாயிரம் ஆண்டுகளாக முறைப்படுத்தப்பட்டு, ஒழுங்குபடுத்தப்பட்டு வளர்க்கப்பட்டு வரும் தமிழ்க் கவிதைக் கலை இன்று வளரும் நெறியை ஆராய்வது நம் கடமையாகும்.

தற் காலத்தில் பலர் கவிதை எழுதுகின்றனர். சிலர் 'கவிதை' என்று பெயரிட்டு 'சிலவற்றை' எழுதுகின்றனர்.

> கவிதை எழுதுவோர், தம்படைப்பை உருவாக்கும்முன், நாம் இயற்றுவது இலக்கியப் பண்பும், கவிதைத் தகுதியும் உடையதாக விளங்க வேண்டும்; உலகினர்க்குப் பயன் படுவதாக அமையவேண்டும்; உணர்வும் அறிவும் வளரக்கூடிய

ஆர்வத்தை உரத்தை ஊட்டக்கூடியதாக இருக்க வேண்டும்.' என்று மன்மாற எண்ண வேண்டும். இன்று சிலர்' எழுறு வதில் மேற் குறித்த இயல்புகள் இல்லாதிருப்பத்தைக் காணும்போது இலக்கியச் சுவைஞர்க்கு கழி பெருந்துன்பம் மிகுவது இயல்பே.

வெறும் சொல்லடுக்குப் பிதற்றல்களாகவே சில கவிதைகள் உருவாக்கப்படுகின்றன. இதற்குரிய காரணம் என்ன?

1. யாப்பிலக்கணம் அறியாமல் பாட்டியற்றுவது.
2. கடுமையான இலக்கணவெறியோடு பாட்டியற்றுவது.
3. புரியாத சொல்லாட்சிகளைத் திணிப்பது.
4. கற்பனை—கருத்து வளமும், எண்ணும் திறனுமற்றோர் புதுமையாகப் படைக்க இயலாமையால் 'ஏதேனும்' எழுதித் தீர்ப்பது.
5. தகுதியற்றவர்களுக்கு நிறைய வாய்ப்பும் (தன்னலம்-நட்பு முதலிய காரணங்களால்) இலக்கியத் துறையில் இடம் கிடைப்பது.

இந்த காரணங்கள் பெரும்பான்மையான 'தகுதியற்ற கவிதைகள்' தோன்ற வாய்ப்பளிக்கின்றன.

அதுமட்டு மின்றி, உண்மையான புலமையாளர்களின் நல்ல படைப்புக்களைப் பதிப்பகங்களும், இதழ்களும் போற்றி வெளியிடுவதில்லை. இதனால் பல நல்ல கவிஞர்கள் அறிமுகம் ஆகாமல், வளரும் வாய்ப்பின்றி, வாடி, ஆர்வம் குன்றி மறைகின்றனர். இந்நிலை உடனே மாறினால், தமிழ்க் கவிதையின் 'புதுமலர்ச்சி ஊழி' மிக்க எழிலோடு பொலியும்.

வரையறுக்கப் பெற்ற இலக்கண வளங்கனிந்தது நம் தமிழ். இதை மிக எளிதில் 'ஏனோ, தானோ' வென்று மிகத் தாழ்ந்த நிலைக்குத் தள்ளி விடச் சில 'பரந்த உள்ளத்தினர்' முயல்வது அறியாமையே யாம்.

இலக்கண வரம்பில்லாத கொச்சை மொழிகள் பிற மொழிகளிடமிருந்து இலக்கணத்தையும் இலக்கண-இலக்கிய மரபுகளையும் கடன் வாங்கிச் செழிக்கின்றன. இந்நிலையில் வேலியைப் பயிருக்குரியவர்களே அழிக்க முனையும் செயல் நலம் பயக்குமா? இது பெரியோர் செயலாகுமா?

இலக்கணத்தைப் போற்றிக் கடைப்பிடிக்க வேண்டுமென்று கூறும்போது, கடுமையான—வழக்கற்ற—இலக்கண நெறிகளைக் கண்மூடிப் போற்ற வேண்டுமென்று யான் கூறவில்லை. அடிப்படையான—இன்றியமையாத—மொழிவளத்தைக் காக்கும் இலக்கணப்பகுதிகளைக் கட்டாயம் ஓம்ப வேண்டும்; கடைப்பிடிக்க வேண்டும்.

எழுத்தெண்ணிப் பாட்டியற்றுவதையும், புரியாத முரட்டுப் பாக்களை ஆக்குவதையும் தவிர்க்கவேண்டும். உண்மையில் அத்தகு கவிதைகள் செல்லக்காசாகி விட்டன.

கவிஞரின் கற்பனையாற்றலையும், உணர்ச்சித் துடிப்பையும், எண்ணப் பெருக்கையும் தடைசெய்யாமல் தூண்டி விடுவதோடு துள்ளி வளரச் செய்யும் யாப்பிலக்கணங்களைக் காத்தோம்பிக் கடைப்பிடிக்க வேண்டும்.

சான்றாக ஆசிரியர் பா வகைகளும், அதன் பாவினங்களும்; வெண்பா வகைகளும், அதன் பாவினங்களும் போற்றிப் புரக்கப்பட்டால் போதும். இக்கருத்தைக் காலவோட்டத்தில் நம் தமிழ்மொழி வெற்றியோடு இயங்க வேண்டும் என்ற ஓரே காரணத்திற்காகவே கூறுகிறேன். இன்று பெரு வழக்காக 'ஆசிரியம், வெண்பா' ஆகியவைகளையே பெரும்பாலோர் கையாள்கின்றனர்.

நேரிசையாசிரியப்பாவும், நிலைமண்டில ஆசிரியப்பாவும், பஃறொடை வெண்பாவும் காப்பியங்கள் இயற்ற எளிய பாவகைகளாக உள்ளன. இலக்கணச் சிக்கலற்ற இப் பாவினங்களால் கருத்தோட்டம் தடையாகதவாறு செய்தியை வெளியிடுவது எளிது.

இன்று நடைமுறையில் காப்பியங்கள் எண்சீர் விருத்தங்களாலும், அறுசீர் விருத்தங்களாலும் தான் ஆக்கப்படுகின்றன. ஓரிருவர் நேரிசை வெண்பாவில் காப்பியங்கள் இயற்றிடினும் பெருவழக்கு குறைந்துள்ளது. தனிப்பாக்களாக நேரிசை வெண்பாக்கள் இயற்றப்படுகிறது.

யாப்பிலக்கணத்தை மொழியின் கட்டுக்கோப்பைக் காப்பதற்குரிய கருவியாகவே கொள்ள வேண்டும். மொழியின் வளர்ச்சியைத் தகையும் படைக்கலமாக யாப்பிலக்கணத்தை ஆளக்கூடாது. இப்படிப்பட்ட நிலை இடைக்காலத்தில் உண்டானதால் தான் 'சிந்துப் பாடல்', 'தென்பாங்கு', 'கண்ணி வகைகள்', 'கும்மி' 'கோலாட்டப்பாடல் வகைகள்', 'இசைப்பாடல்கள்' ஆகிய புதுவகை யாப்புக்கள் தோன்றின. இலக்கண வரையறை, தளை, சீர் முதலியவைகளைக் கவனியாது ஓசை ஒழுங்கும், தாளக் கட்டும் மட்டும் போற்றப்பட்டு உருவாக்கப் பெறும் 'அந்தப் பாடல்களும்' பெருஞ் செல்வாக்கு பெற்றன.

இவை மட்டுமின்றி முறையான மொழியறிவும், இலக்கண அறிவும் பெறாதாரும் பாட்டுச் சுவைப்பசியால் 'நாடோடிப் பாடல்களை'ப் படைத்து வழக்கில் ஆளலாயினர். இத்தனை பாடல்களுக்கும் மக்களிடம் இருக்கும் பெருஞ் செல்வாக்கை, மதிப்பை இனி யாராலும் குறைக்கவும் முடியாது.

இப்பாவினங்கள் யாப்பிலக்கணங்களுக்கு உட்படாதவை என்பதற்காக இலக்கிய உலகிலோ, மக்கள் மன்றிலோ உள்ள வரவேற்பைத் தகைய முடியுமா? இனைய பாக்களையும் இலக்கியத்தின் துணைத்துறைகளாக ஏற்றுக்கொள்வதோடு, புதிய இலக்கணங்களிலும் இடமளித்துச் சிறப்பிக்கவேண்டும்.

இன்று சிலர் யாய்ப்பு வகைகளை முற்றிலும் புறக்கணித்துப் 'புதுயாப்பை உருவாக்குகிறோம்' என்று கூறிக்கொண்டு கண்டபடி உளறிப் 'பாட்டு, கவிதை' என்ற பெயர்களில ஏதோ எழுதிக் குவிக்கின்றனர். இவை இலக்கியப்பணி தானா? அல்லது இலக்கியப் பிணியா? என்று கற்றோர் கவலைப்படவேண்டி நேரிடுகிறது.

> பழைய யாப்பைவிட இனியதும் அரியதுமான யாப்பை இக்காலத்தினர் கண்டுபிடித்திருந்தாலும் நாம் பாராட்டி வரவேற்கலாம். ஆனால் புதுயாப்புகள் 'யாப்பு' என்ற பெயருக்கே பொருந்தாதவையாக உள்ளன தமக்குத் தோன்றியவாறெல்லாம். எழுதிவிட்டால் அவை 'கவிதை' யாகிவிடுமா? இந்தப் புதுக்கவிதைப் படைப்பாளர்களுக்கு உண்மையில் கவிதையறிவு சற்றும் இல்லை. ஆனால் 'கவிஞர்' பட்டம் பெறும் ஆர்வம் மிகுதியாக உள்ளது ஆகவே 'புதுமை' என்ற சொல்லைக்காட்டி ஏமாற்ற முற்படுகின்றனர். உரைநடையையே மூன்று சொற்களாகவோ, நான்கு சொற்களாகவோ அடுக்கி நான்கடி எட்டடி முதலிய அடிகளாகப் பிரித்துக் கோத்து விட்டால் அது கவிதையாகி விடும் என எண்ணுகின்றனர். என்னே புலமை!! இனைய 'கூச்சல் கவிஞர்கள்' பெருகிவிடாமலிருக்க வேண்டுமானல் முறையான நல்ல கவிதைகளைப்போற்றி வரவேற்று ஒப்பும் பண்பாடு மக்களிடத்திலும், இதழ்கள், பதிப்பகங்களிடத்திலும் உண்டாக வேண்டும். அது மட்டுமின்றி தவருன கவிதைகளை எழுதுபவர்களைப்பற்றி எடுத்துக்காட்டித் திருத்த இலக்கிய ஏடுகள் அச்சமின்றி ஆண்மையோடு முற்பட வேண்டும். புகழ்பெற்றவராயினும், செல்வாக்குள்ளவராயினும் தகுதியற்ற கவிதை எழுதினுல் அதை எடுத்துக்காட்டித் திறனாய வேண்டும். இவ்வாறு செய்தால் பிற கவிஞர்களும் தம்படைப்புக்களைப் பொறுப்போடு உருவாக்க முனைவர்.

மொழிவளர்ச்சி சீரோடு அமைய வேண்டுமென்றால், எல்லா மக்களும் இலக்கணத்தில் நல்ல அறிவு பெற்றிருக்க வேண்டும். இன்று 'இலக்கணம்' என்ற சொல்லைக் கேட்ட அளவில் அஞ்சி நடுங்கும் நடுக்கம் ஒழிய வேண்டும். அதற்கு ஒரேவழி மிகஎளிதில் இலக்கணங்களைப் பிறர் துணையின்றித் தாமே கற்கக்கூடிய வகையில் உரைநடையில் இலக்கண நூல்கள் இயற்றப்பெற்றுப் பரப்பப்பட வேண்டும். இந் நூல்கள் மலிவுவிலையில் வெளியாக்கப்பட வேண்டும். அது

மட்டுமின்றி இதழ்களில் இலக்கணக் கட்டுரைகள் சுவையோடும், மிக எளிமையோடும் வெளிவர வேண்டும்.

கவிஞர்களின் கற்பனையும், எண்ணப் போக்கும் பழைய முறைகளுக்கே அடிமைப்பட்டுக் கிடவாமல் விடுதலை பெற வேண்டும். உரிமையோடு வெளியுலகை ஆராய வேண்டும். அறிவியல், ஆய்வியல் நுட்டபங்களையும், பிற கலைத்துறைச் செய்திகளையும், கருத்துகளையும் போற்றி அவற்றைக் கவிதைக்குரிய பொருள்களாக்கிக் கொள்ள வேண்டும்.

பழைய முறையிலேயே விளக்கங்களையும், உவமைகளையும், சொல்லாட்சிகளையும், மரபுத்தொடர்களையும் அமைப்பதைக் கைவிடல் நல்லது. சொல்லும் முறையில் இனிமையும் தெளிவும் எளிமையும் அமைவது பாராட்டிற்குரியதாகும்.

> ஆழ்ந்த எண்ணமும், கூர்ந்து நோக்கி நுண்ணிய அழகினை உணரும் திறமும் இல்லாமையால், தான் சீரிய உணர்சியும் நயமும் இல்லாத கவிதைகள் மலர்கின்றன.

'ஓசை நலன் மட்டும் அமைந்து விட்டால் போதும்' என்றெண்ணிப் பாடும் 'ஓசைக் கவிஞர்கள்', 'காசுக் கவிஞர்களைப்' போன்றவர்களே. இவ்விரு சார்பினராலும் இலக்கியம் வளம் பெற வழியில்லை. ஓசை, பாட்டின் ஓர் சிறந்த உறுப்பே தவிர, கவிதையே ஓசையல்ல. அவ்வாறுயின், 'லல்லல்லல்ல' 'தனதனன தன' என்ற சந்த இசையும் கூட ஒழுங்குபடுத்தப் பட்டால் கவிதையாகி விடுமே!

கவிதையின் உயிர் அதனிடமுள்ள அழகிய, சிறந்த பொருளும், உணர்ச்சி நலமுமே என்பதை நன்குணர வேண்டும்.

நடையழகிலும், சொல்லாட்சியிலும் புதுமையும், பொலிவும் அமைக்கக் கவிஞர்கள் முயல வேண்டும்.

புதுப் புதுக் கருத்துக்களைப் புதுப்புது முறையில் படைப்பதில்தான் புலவனுக்குப் புதிய இன்பம் பொங்கும். பழம் பாட்டின் கருத்தையே மீண்டும் பாடுபவர்க்குப் புதிய ஆக்கத்தால் விளையும் உணர்வடைவும், படைப்பின்பமும் கிட்டாதே!

'அரசியல் கவிதைகள்' தமிழில் தோன்றியுள்ளனவெனினும் என்றும் நிலைபெறும் படைப்புகள் ஏதுமில்லை. போற்றும் கவிதைகள்; அல்லது தூற்றும் கவிதைகளே பிறந்துள்ளன. இவை நிலைத்த இடம்பெற்று இலக்கியத்தகுதி பெறுமா என்பதைக் காலக் காற்று ஒன்றே தீர்ப்பளிக்கும்.

யாப்புக்கு உட்பட்டதெல்லாம் கவிதையாகிவிடாதே !

> கவிதையென்றால் அதில் அழகும், அழகுணர்ச்சியும், அழகுச் சுவையும், ஆர்வத் துடிப்பும், உணர்வாக்கமும், இன்ப மலர்ச்சியும், மெய்ப்பாட்டு வளமும், உயிரும், ஒப்பற்ற ஒலியும் இருக்க வேண்டும்.

உணர்ச்சிகளைப் போற்றிப்பாடும் மரபு தமிழில் புதிதாக வளரவேண்டும். உணர்ச்சிக் கவிஞர்கள் மிகவும் வேண்டும்.

சிறு சிறு செய்திகளிலும், சிறு பொருட்களிலும் உள்ளத்தைத் தோயவிட்டு அதிலுள்ள உண்மைகளையும், அழகு நுட்பங்களையும், விழுமிய அடைவுகளையும், ஒட்ப நலனையும் பாட்டாக்கும் கலை வளரவேண்டும்.

> தனி மனிதருக்கு எவ்வாறு நாகரிகமும் பண்பாடும் சால்பும் இன்றியமையாதனவோ, அவ்வாறே கலை-இலக்கியம் கவிதைகளுக்கும் அவை நனி இன்றியமையாதன. எனவே நாகரிக நுட்பம் வாய்ந்து, பண்பாட்டு ஒட்பம் செறிந்து, சால்புத்திறம் கனிந்து கவிதை அமைந்திருக்க வேண்டும்.

கவிதை இயற்றுவோர் தம் கவிதைகளை எழுதிய உடனே அச்சுக்கு அனுப்பாமல்; சிலகாலம் தம்மிடமே வைத்திருந்து பின் அதை எடுத்துப் படித்துப்பார்த்து அப்போதும் சுவை பயந்தால் அச்சிட விடுப்பது நல்லது.

சிறந்ததாக ஒரு பாட்டு பாடினாலும் போதும். அது நிறைந்த வயதும் உயர்ந்த வாழ்வும் கொண்டு விளங்கினால் அதுவே பெருமைக்குரியது.

கவிதைத் திறனாய்வுக்கலை நல்ல முறையில் தமிழில் எழுதப் பெற்றால், மறுமலர்ச்சிக் கவிதை வளம் மிகச்சிறப்பாக வளர வாய்ப்புண்டு. ஆராய்ச்சி நோக்கோடு கூடிய தற்காலக் கவிதைகளைப் பற்றிய திறனாய்வு உடனடியாக உருவாக வேண்டும். ஆயின் இத்திறனாய்வால் சிலர் வீழவும் இடம் அமையும். இத்தகு இடர்ப்பாடுகளை ஏற்று அதைக் கடக்கக் கூடிய வாய்ப்பும் சூழ்நிலையும் தமிழ்நாட்டில் உண்டா ? என்பது தனிச் செய்தியல்லவா ?

கவிதையைத் திறனாயும்போது பலர் 'கவிஞனின் வாழ்க்கையையும்' உடன் கலந்து போற்றவோ—தூற்றவோ முற்படும் இழிந்த குற்றம் ஒரு தொற்று நோய் போன்றுள்ளது. இது ஆராய்ச்சித் திறமற்ற—இலக்கிய உணர்வற்ற—நிலையால் உருவாவதாகும். இத்தகு மனப்பான்மை மாற வேண்டும்.

சிலர் இலக்கியத்துறையை விட ஏனைய துறைகளில் தம்பெயரை நிறுவிப் புகழ்பெற்று விட்டுக் கவிதை எழுதுவர். இத்தகையோருக்குக் கவிதையின் திறன் ஒன்றை மட்டுமே வைத்து ஆய்ந்து திறன்காணும் நிலையில் கூடிய நேரிய

திறனாய்வு அமைந்தால், கவிதைத் துறையில் அவர்கட்குரிய 'உண்மை இடம்' எவ்வளவு என்பதை உணர்த்தக் கூடும். 'எப்படியாவது புகழ்பெறுவதும், அப்புகழை முதலாகக் கொண்டு எழுத்தை விற்பதும்' அறிஞர் போற்றும் செய லாகா. இவர்கள் ஐந்தாம், ஆறும்படி எழுத்தாளர்களாகவே கருதப்பெறுவர்.

உண்மைக் கவிதையை மனம்விட்டுப் பாராட்டும் பண் பாடு வளர்ந்தால், தகுதி—திறமை முதலியவைகளை மட்டும் நோக்கி ஆராய்ந்து மதிப்பீடு செய்யும் நல்ல நாகரிகம் இலக்கிய உலகிலும் சுவைஞரிடத்தும் உண்டானால்; வளரும் கவிதையின் வாழ்வும் வாழும் தமிழின் வளமும் திண்ணமாகப் பொலிவு பெறும்.

> நடைமுறை உலகச் சிக்கல்கள், இக்கால வாழ்க்கைப் போராட்டங்கள், இன்றைக்கு வேண்டிய அறிவுரைகள்; இன்றையிலிருந்து நாளை உலகுக்கு மாறும் நிலையைவைத்து அமைத்த கருத்துக்கள் ஆகிய செய்திகளுக்குக் கவிஞர்கள் சிறப்பிடம் கொடுப்பது நல்லது.

காதலையே பாடுவது என்று கருதியிருக்கும் நிலை இலக்கிய வளர்ச்சிக்குப் போதிய உரம் ஊட்டுவதாகாது.

> கவிதைகளைப் படித்துச் சுவைக்கும் இயல்பு பலரிடம் குறைந்துவரக் காண்கிறோம். இது நம் மக்களின் உள்ளப் பண்பு குறைந்து வருவதையே காட்டுகிறது. உயரிய, நாகரிக மான உள்ளப்பண்பை உருவாக்கும் கலைச்சுவை கவிதை இன்பமேயாகும். ஆரவாரமானதும் நிலையான பயனோ, இன்பமோ, ஆறுதலோ அளிக்காததும், சில மணித் துளிகளே உள்ளக் கிளர்ச்சி ஊட்டுவதுமான பொழுது போக்குகளை மட்டுமே இக்காலத்தில் பலர் நம்புகிறார்கள். இந்த சிறிய மனப்பான்மையால் வாழ்வின் வீழ்ச்சியே உருவாகிச் சூழ்கிறது என்பதை அவர்களில் பெரும்பாலோர் அறிவதில்லை.

ஆகவே உள்ளுணர்வைப் பண்படுத்தி, நம் சால் புணர்வை உயர்த்தும் அழகிய அரிய கவிதைகளில் நாடோறும் ஆழ்ந்தாழ்ந்து சுவைத்து இன்புறும் இயல்பு தமிழருக்கு இன்னும் மிகவேண்டும். **உலகவாழ்க்கை உயிரற்ற பொறி யியல் வாழ்வாக ஆகிவருவதே இக்காலத் தீவினைகளுக்கும், துன்பங்களுக்கும், இழிவார்ந்த வாழ்வுப் போராட்டங்களுக் கும் அடிப்படைக் காரணமாகும்.**

குறிப்பாகத் தமிழ்ப் பெண்கள் கவிதை கற்பது மிகக் குறைவாக இருக்கிறது. அவ்வையாரும், வெள்ளி வீதியும் போன்ற நூற்றுக்கணக்கான பெண்பாற் புலவர்கள் நிறைந்து வாழ்ந்த தமிழ் நாட்டில், கவிதையைச் சுவைக்கும் பெண்டிர் அருகிக் காண்பது வருந்தற்குரிய இழி நிலையன்றோ!

கவிதைச் சுவைஞர்கள் பெருகினால்தான், கவிஞர்கள் வளரமுடியும்; சிறந்த கவிதைகளும் தோன்றமுடியும்.

காதலுக்காகத் தம்மைத்தாமே அழித்துக் கொள்வதில் காதலர்கள் பேரின்பம் காண்கின்றனர். அதுபோலத் தொண்டு, கலை, இலக்கியம், உலக நன்மை ஆகியவைகளுக்காகப் புலவர்கள் தம்மைத் தாமே அழித்துக் கொள்வதில் பேரின்பம் கொள்கின்றனர். இனைய தன்னலத்துறவிகளுக்கு மக்கள் என்ன கைம்மாறு செய்ய முடியும்? அப்புலவர் பெருமக்களின் கவிதையைச் சுவைத்துப் புகழ்ந்தும், அவர்கள் காட்டும் வழியில் வாழ்ந்தும் தம்மைத் தாமே மக்கள் பாராட்டிக் கொள்வதே தக்க நன்றியாகும்.

மனவாழ்க்கையில் மாசு படிந்தால் உடல் வாழ்வும் வீழ்ச்சியுறும். அம் மனவாழ்வைத் தூய்மையாக்குவது கலையும் இலக்கியமுமே. ஆகவே 'கவிதை ஈடுபாடு' நம் தனிவாழ்வை நன்னெறிப் படுத்தும் துணையாகும்.

கற்பனை உள்ளம் இருந்தால் போதும்; வாழ்க்கைத் துன்பங்களை வென்றுவிடலாம். அக்கற்பனை உள்ளத்தைப் பேணுவது கவிதையும் கலையுமே. ஆகவே கவிதையைப் போற்றி, கலையைச் சுவைத்து வாழ்க்கையில் நல்லின்பத்தை அடைவோம்.

தமிழ்க் கவிஞர்கள் தனித்தமிழ் நடையில் எளிய சொல்லாட்சியில் தம் கவிதைகளை உணர்ச்சிப் பிழம்பாக யாக்க வேண்டும்.

மொழி ஒரு பெண் என்று நம்பவேண்டும். பெண்ணுக்குக் கற்பும், அறவொழுக்கமும், பண்பும், தூய்மையும், எவ்வளவு இன்றியமையாதனவோ; அந்த அளவு மொழிக்குக் கற்பும், தூய்மையும், ஒழுக்கமும் சால இன்றியமையாதனவாகும். ஆகவே கவிஞர், நாடகாசிரியர், கதையாசிரியர், கட்டுரையாளர், திறனாய்வாளர், வேறு எவ்வகை எழுத்தாளராயினும் பெரிதும் தனித்தமிழ் நடையில், எளிய இனிய மொழியமைப்பில் எழுத வேண்டும். அப்போதுதான் தமிழின் வண்ணமும் வளமும் வலிவும் வனப்பும், எழிலும் ஏற்றமும் இனிது சிறக்கும்.

கவிதையைப் பெற்றது தமிழ்; கவிதையால் வாழ்ந்தது தமிழ்; கவிதையால் வளர்ந்தவர் தமிழர்; தமிழரால் வாழ்ந்துயர்ந்தது கவிதை என்ற உண்மையை உணர்ந்து, இக்காலத் தமிழர் கவிதையை வாழ்த்திப் பயின்று வளம் பெற்றுப் பண்பாடு ஓம்ப வேண்டும். இது தமிழர் தாய் மொழிக்குச் செய்யும் அமைதியான நிலையான உண்மைப்பணியாகும்.

வாழ்க தமிழ்க் கவிதை வளம்!

அந்தணர் என்போர்.....?

மு. அரங்கராமாநுசம்
தமிழாசிரியர், மாவட்ட மன்ற உயர்நிலைப் பள்ளி மேட்டுப்பாளையம்
திருச்சி மாவட்டம்.

"பிறப்பொக்கும் எல்லா வுயர்க்கும் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்மையான்"

என்றார் வள்ளுவர். ஒருவன் பெருமையடைவதற்கும் சிறுமையடைவதற்கும் கட்டளைக்கல் அவரவர் செய்யும் செயல்களே. மக்களாகப் பிறந்தார் தங்களுக்குள் எவ்வித பாகுபாடுமின்றி நாளடைவில் தனித்தனியாகப் பழக்கப்பட்டனர்.

'நால்வகைச் சாதியை நாட்டினில் நாட்டினிர்'

என்று கபிலரகவல் கூறுவதொப்ப நாள் செல்லச் செல்ல சாதிப் பாகுபாடு நாட்டில் தோன்ற' ஆரம்பித்தது. அதனால் அந்தணர், அரசர், வணிகர், வேளாளர் என்ற நால்வண்ணப் பாகுபாடுகள் நாட்டில் தோன்றின. அவற்றின் அடிப்படையில் பின்னால் புற்றீசல்போல் அவரவர் என்ன தொழில் செய்கிறார்களோ அவர்கள் ஒரு பிரிவெனப் பகுக்கப்பட்டனர். உயர்ந்தவன் தாழ்ந்தவன் என்ற எண்ணப் பாகுபாடு வலியூன்றத் தொடங்கி விட்டது. ஆனால் முதலில் கூறப்பட்ட 'அந்தணர்' என்போர் பிற்காலத்து ஒருவகை இனத்தாருக்கே உரியது எனப் புகலலாயினர். அதைக் கொண்டு தாமே உயர்ந்தவர் எனக் கூறவுந் தொடங்கினர். பிறகு 'ஐயர்' என்பது அவ்வினத்தையே கூறுவது எனவும் சாற்றினர். ஆனால் ஒருவாறு ஒப்புமை நோக்கி ஆராய்ந்தால், அறவோர் யார்? அந்தணர் யார்? ஐயர் யார்? ஆரியர் யார்? முனிவர் யார்? தென்புலத்தார் யார்? என்பது தெள்ளிதின் விளங்கும்.

"அறவாழி அந்தணன் தாள்சேர்ந்தார்க் கல்லால்
பிறவாழி நீந்தல் அரிது" (திருக்குறள்–அ)

அறக் கடலாகிய அந்தணனது தாளாகிய புணையைச் சேர்ந்தார்க்கு அல்லாமல் அதனிற் பிறவாகிய கடல்களை நீந்தல் அரிது என்பார் பரிமேலழகர் அறவழியில் வாழ்கின்ற அந்தணர் சார்ந்தொழுகும் செந்தண்மை வழி ஒருவன் ஒழுகுவானானால் அவனுக்கு மற்றைய செயல்களை எல்லாம் செய்தல் எளிதாம். அவ்வாறு நடவாதவனுக்கு மற்றையனவற்றை செய்தல் அரிது என்பதாம். அறத்தின் வழி வாழ்கின்றவன் அறவாழி எனப் படுவான். இக்கருத்தை வலியுறுத்தல் நோக்கி,

"அந்தணர் என்போர் அறவோர் மற்றெவ்வுயிர்க்கும்
செந்தண்மை பூண்டொழு கலான்" (திரு–கo)

இவ்வாறு நீத்தார் பெருமை என்ற அதிகாரத்தில் வள்ளுவர் கூறுகிறார். நீத்தார்களின் பெருமை அளவிடற்கரிது என்பதனை, இவ்வுலகம் இன்றுவரை இறந்தவர்களை எண்ணிக் கணக்கிடுவது போலாகும் என்பார். நீத்தார் என்றவுடன் இல்லற வாழ்க்கையைத் துறந்து, காடே வீடெனக் கொண்டு, மண் பெண், பொன் இவற்றைச் சிந்தையிலே கொள்ளாது வாழும் வாழ்க்கையன்று.

"எல்லாவுயிர்களிடத்தும் அருளுடையவராய் நடந்து கொள்வதால் அந்தணர் என்போர் துறவிகளே யாவர். செந்தண்மை யென்பதற்கு அருள் இரக்கம் முதலியவை கூறலாம். அருளுடையவர்க்கு அந்தணர் என்று பெயர். அருளுடைய தமிழ்த் துறவிகளைக் குறிக்கும் அந்தணன் என்னும் பெயர் பார்ப்பன இனப்பெயர் ஆவதற்குப் பொருந்தாமை அறிக. துறவிகள் உயிர்களிடத்து அருளுடையவராய் நடத்தலினால் அவர்க்கு அந்தணர் என்னும் பெயர் வழங்கலாயிற்று என்பர்".

"இரக்கமுடைய முற்றத் துறந்த முனிவர்களே அந்தணர்கள் ஆவார்கள்"

"துறந்தார்=நீத்தார், மனமாசகலப் பெற்றார்; அறவோர்; அந்தணர்; எவ்வுயிர்க்கும் செந்தண்மை பூண்டு ஒழுகுவோர். துறந்தோர் என்பவர் நாட்டை விடுத்தோடிக் காடுகளில் வாழ்வோரல்லர். அவ்வாழ்வு தன்னலமுடையதாகும். திருவள்ளுவர் கூறுந் துறவோர் உலகிடை வாழ்ந்து மனமாசகலப் பெற்ற அறவோர் என்னும் அந்தணர். அவர்கள் உயிர்களுக்குத் தொண்டு செய்வதிலே கருத்திருத்தி வாழ்ந்தவர். அந்தணரும் அருளாளர்; அறவோரும் அருளாளர்: அந்தணர் யார்? அறவோர் யார்? இருவரும் ஒருவரே. அந்தணர் அறவோர், அறவோர் அந்தணர். பின்னாளில் பொருள் வெவ்வேறு வழியில் திரிக்கப்பட்டது. காரணம் பல வகுப்பு பல மதம் முதலியன தமிழுலகில் புகுந்தமையே யாகும்." அதனாலன்றோ வள்ளுவர் 'அந்தணர் என்போர் அறவோர்' என்றார். உடன் அடுத்து அறன்வலியுறுத்தல் என்ற அதிகாரத்தில், அறமாவது

"அழுக்கா றவாவெகுளி இன்னச்சொல் நான்கும்
இழுக்கா இயன்ற தறம்" (திரு-௩௫)

எனக் கூறினர். பொறாமையும், புலன்கள்மேல் செல்கின்ற ஆசையும் அதன் காரணமாக வரும் வெகுளியும், கடுஞ்சொல்லுமாகிய இந்நான்கினையும் கடிந்து இடையறாது நடத்தலே அறமாகும். இந்நான்கினையும் தனித்தனியே நாற்பது குறட்பாக்களில் சொல்வனவற்றை அனைத்தும் தொகுத்து அந்தணர் என்போர் கொள்ளவேண்டியன அல்ல,

இவைகளில் தவறி விழாமல் நடத்தலே அறமாகும். இவற்றை உள்ளத்திலே எண்ணுதலே அறமாகும். எண்ணினால் அது செய்ததுபோல் ஆகும். இதனை வலியுறுத்தி "உள்ளத்தால் உள்ளலும் தீதே" எனக் கூறுகிறார்.

அவ்வாறு அறவழி ஒழுகும் அந்தணர்களின் வெகுளியை மற்றையோர் தாங்கல் அரிது என்பதனை

"குணமென்னுங் குன்றேறி நின்றார் வெகுளி
கணமேயுங் காத்தல் அரிது" (திரு-உகூ)

என்ற குறட்பாவில் கூறுகின்றார். அவ்வந்தணர்கள் இவ்வுலகத்து வாழுங்கால் தன் ஐம்புல ஆசைகளை அறவழியில் செலுத்தி, பிறரையும் அவ்வழியில் செலுத்தி இயங்கும்படி செய்கின்ற பண்பு அவர்களிடம் உண்டு. இந்நில உலகத்து அவராணையாகச் சொல்லப்பட்ட மந்திரங்களே அதற்குச் சான்று ஆகும். (மனன் + திரம் = மந்திரம்) அதனாலன்றே அவர்கள் வெகுண்டு கூறினாலும், அருளிக் கூறினாலும் அது அவர்கள் உள்ளிய உள்ளப் பாங்கின்படி பயன்தரும் என்றார்.

"நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளந்த
மறைமொழி தானே மந்திர மென்ப" (தொல்-சஅ0)

இவ்வாறு தொல்காப்பியர் கூறும் நிறைமொழி மாந்தர் யார்? அவர்தான் அந்தணர்: உள்ளத்தே தூய்மை நிறைந்து, ஒரு நிலை கோடாது நிறையாக நின்று, அவர்கள் ஆணையாகச் சொல்லுகின்ற, மன உறுதிபெற்று வருகின்றவையே மறைமொழியாகும். அவர்கள் உள்ளத்தினின்றும் வருகின்ற மொழி செம்மொழியாகும். அது மன உறுதிபெற்று வருவனவாம். 'எண்ணிய எண்ணியாங்கு எய்துப' என்பார் வள்ளுவர். எண்ணத்திற்கு வலிமை உண்டு என்பது அறிவியலார் கண்ட முடிபு. 'நிறைமொழி' என்றதனால், அவர்கள் அறமற்ற வழியில் செல்லாது, தங்கள் புலன்களை ஒருவழி செலுத்தி உரம்பெற்ற மனதிலிருந்து வருவது நிறைமொழியாகும். 'நிறை' என்றால் கற்பு. ஆண்களுக்கும் உண்டு. அவர்களும் அறநெறி வழுவினால் கற்பிலிருந்து தவறியவர்கள் ஆவார்கள். சிறை முதலியவற்றால் மகளிரைக் காக்கும் காப்பு என்ன செய்யும்? ஒன்றும் செய்ய இயலாது, அவர்கள் தங்கள் உள்ளத்தை நிறை தவறாது செலுத்துதலே சாலச் சிறப்பு ஆகும் என்பதனை 'நிறைகாக்கும் காப்பே தலை' என நவின்றார். காப்பியர் சொன்ன அந்நூற்பாவின் எதிர்படிவம் தான் வள்ளுவர் காட்டும் படியாகும். அது

"நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து
மறைமொழி காட்டி விடும்" (திரு-உஅ)

என்னும் திருக்குறள் மலராகும். அவ்வந்தணர்களால் இயற்றப்பெற்ற நூலே மறையாம். அவர்கள் வாழ்ந்த நெறி அறநெறி. அவர்களின் பெருமையைக் கூறமுடியாது எனக் கூறிய வள்ளுவர், அவர்களின் பெருமையினை அறிய விரும்பினால் அவர்கள் மறையே போதுமானதாகும் எனப் புகன்றார். அவர்கள் நூலுக்கும் அவ்வறத்திற்கும் முதன்மையாக அரசனின் செங்கோல் நிற்கும் என்பதை,

"அந்தணர் நூற்கும் அறத்திற்கும் ஆதியாய்
நின்றது மன்னவன் கோல்" (திரு-௫௪௩)

தூய்மையான அறவழி வாழும் அந்தணர்கள் மறை கூறுகின்ற செந்நெறி வழிநிற்பவர் என்பதை அறியலாம். ஆகையினால் மாநிலங் காவலன் ஆவான் எல்லா உயிர்களாலும் யாரும் துன்புறு வண்ணம் காப்பதே அறமாகும், அதுவே செங்கோலாகும். அவ்வந்தணர்கள் கூறுகின்ற அறநெறியின் முறை வழுவாது அரசர்களும் வாழ்ந்தார்கள். என்பதை பாண்டியன் அறிவுடை நம்பி தன்நாட்டு மக்களிடம் மற்றையோர் சொல் கேட்டு, மந்திரிகளின் எண்ணத்தின் வண்ணம் அரசோச்சும் போது அது தவறு என எடுத்துரைத்தார். பிறகு அதனைக் கேட்டு மன்னனும் நடந்தான் எனப் புறநானூற்றால் அறிகிறோம்.

அரசே! விளைநிலம் ஒருமா அளவினும் குறைந்ததாக இருந்தாலும், அதனுள் விளைகின்ற நெல்லை அறுத்துக்கொண்டு வந்து, கவளம் கவளமாக ஒரு யானைக்குக் கொடுத்தால் அது பல நாட்களுக்கு உணவாக வரும். அவ்வண்ணமின்றி நூறு செய் அளவுள்ள நிலமாயினும் அவ்வயலுள் யானையை தனியே மேயவிடின், அது உண்ணும் அளவைவிட அதன் காலால் மிதிபட்டு அழியும் அளவே மிகுதியாகும். அதுபோலவே அறிவுடை வேந்தன் வரிவாங்கும் வழியை அறிந்து வாங்குவானாயின் அவன் நாட்டில் வாழும் மக்கள் அவனுக்கும் கொடுத்துத் தானும் வாழ்வார்கள். ஆனால் குடிமக்களைக் கொடுமைப்படுத்தி, வரிவாங்க விரும்புவானாயின் "யானை புக்கப் புலம்போலத் தானும் உண்ணான் உலகமும் கெடுமே" என்று அறிவுறுத்த அதன் வழி அவ்வரசனும் நின்று செங்கோல் செலுத்தினான். அதனால் புலவர்கள், மற்றவர்கள் நல்வழி வாழ அறவுரை கூறியவர்கள் ஆவார்கள்.

"ஆபயன் குன்றும் அறுதொழிலோர் நூல்மறப்பர்
காவலன் காவான் எனின்"

இக்குறட்பாவினை நோக்கி காத்தற்குரிய அரசன் உயிர்களைக் காவான் ஆயின் அவன் நாட்டுப் பசுக்களும் பால் குன்றும் அந்தணர்களும், நூல்களை மறந்துவிடுவர் என்பர்.

செங்கோல் முறைபற்றி செங்குட்டுவன், அரசர் குடியில் பிறத்தலானது துன்பம் தருவதல்லாது தொழும் தக வுடையது அன்று எனக் கூறுவதிலிருந்து, மன்னன் செங்கோல் தவறின், மழை பெய்யாது அதனால் வளம் குன்றும், அந் நிலையில் அவன் நாட்டில் உண்டாகக்கூடிய பயன்கள் எதுவும் விளையாது. முதன்மையாகத் தொழிலைச் செய்யக்கூடிய தொழில் உடையவர்கள், நூல்நெறி வாழ இயலாமல் அந் நூலையும் மறப்பார்கள். அந்நூல் வழி ஒழுக முடியாது என்பதாம். 'அறுதொழிலோர்' என்பதற்கு, புலன்கள் வழி அறிவு செல்லாது தன்வயப்படுத்தி, மனம் ஒருமையுடன் நின்று முயலச் செய்யும் அந்தணர்களைக் கூறலாம். 'அறு தொழிலோர்' என்பதற்கு ஆறு தொழில்களைச் செய்யும் அந்தணர் என்று கூறுவர். அப்படியாயின் காப்பியர் கூறும் நூற்பாவான,

"அறுவகைப் பட்டப்பார்ப்பனப் பக்கமும்
ஐவகை மரபின் அரசர் பக்கமும்
இருமூன்று மரபின் ஏனோர் பக்கமும்
மறுவில் செய்தி மூவகைக் காலமும்
நெறியின் ஆற்றிய அறிவன் தேயமும்
நாலிரு வழக்கில் தாபதப் பக்கமும்
பாலறி மரபிற் பொருநர் கண்ணும்
அனைநிலை வகையொடு ஆங்கெழு வகையால்
தொகைநிலை பெற்றது என்மனார் புலவர்" என்பதில்
(தொல்–புற–எச)

"அறுவகைப் பட்டப்பார்ப் பனப் பக்கமும்" என்பதற்கு ஓதல், ஓதுவித்தல், வேட்டல், வேட்பித்தல், ஈதல், ஏற்றல் உடைய அந்தணர் எனப் பொருள் இருத்தல் அறியலாம். தான் கற்றலும், பிறருக்கு அறிவினை ஊட்டலும், தான் விரும்புதலும், பிறரை விரும்பும்படி செய்தலும், தான் கொடுத்தலும் பிறரைப் புகழ்தலும் அந்தணர் தம் தொழிலாம்.

இதில் கூறப்பட்டுள்ள ஈதல் தொழில் பார்ப்பனர்களுக்கு உரியது அன்று, அவர்கள் பிறரிடம் ஏற்றலே உண்டு. ஆகை யினால் 'அறுவகைப்பட்ட பார்ப்பனப் பக்கமும்' என்றிருப்பது 'அறுவகைப்பட்ட அந்தணர் பக்கமும்' என்றுதான் காப்பியர் கூறியிருக்க வேண்டும். ஏனெனில் காப்பியர் நால்வகையைக் குறித்து, அந்தணர், அரசர், வணிகர், வேளாளர் என்றே காட்டு தலாலும் அறியலாம். ஈதல் உண்டென்பதை பின்னால் அறியலாம். பார்ப்பனர்களைப் பற்றி அவர்கள் ஒழுக்கத்தைப் பற்றி வள்ளுவரும், காப்பியரும் யாதும் கூறவில்லை.

பாரியும், கபிலரும் வாழ்ந்த நட்பின் திறத்தினை புற நானூறு போன்ற இலக்கியத்தால் அறியலாம். பாரி இறந்த வுடன் தன்னுடன் இறக்கக் கருதிய கபிலனை, நீ இம்மக்களைத் திருமணம் செய்து கொடுத்தபின் வருவாயாக எனக் கூறினான்,

அதனால் அவன் மகளிரை அழைத்துச் சென்று சிற்றரசனுன விச்சிக்கோவிடம் சென்று, இவர்களை மணந்துகொள்வாயாக, எனக் கூறும்பொழுது முல்லைக்கொடி கேட்காது அதற்கு ஒலிக்கின்ற மணிகளுடன் கூடிய தேரினை ஈந்துத் திரும்பிய அம்மன்னன் (ஓரறிவுயிர்களிடத்திலும் அவனுக்கு இரக்கம் உண்டு) மகளிராவர். யானோ பரிசில் பெறுபவன் நிலைபெற்ற அந்தணனும் ஆவேன். நீயோ வருபவர்கட்கு வரையாது கொடுப்பவன் ஆவாய் ஆகையினால் (அந்தணர் என்போர் அறவோர் ஆகலின்) யான் இம்மகளிரை நினக்குப் பரிசாகக் கொடுப்ப நீ கொள்வாயாக என வேண்டினர். அப்பாடல்,

" களங்கொண்டு கனலும் கருங்கண்யானை
விளங்குமணிக் கொடும்பூண் விச்சிககோவே
இவரே. பூத்தலை அருஅப் பனைகொடி முல்லை
நாத்தழும்பு இருப்பப் பாடாதாயினும்
கறங்குமணி நெடுந்தேர் கொள்கெனக் கொடுத்த
பரந்தோங்கு சிறப்பின் பாரிமகளிர்
யானே பரிசிலன், மன்னும் அந்தணன் நீயே
வரிசையில் வணக்கும் வாண்மேம்படுநன்
நினக்குயான் கொடுப்பக் கொள்மதிசினப்போர்
அடங்கா மன்னரை அடக்கும்
மடங்கா விளையுள் நாடுகிழவோயே " என்பதாம்
(புறம் உ00)

இதேபோல கபிலர் இருங்கோ வேளிடம் சென்று மேற் கூறியது போலவே, இரவலர்க்கு ஊருடன் அளித்து, முல்லைக்குத் தேரினை ஈந்த, பறம்பு நாட்டின் தலைவன். இப்பொழுது இப்பெண்மணிகளுக்கு யானே தந்தை, தோழனு மாவன், என் மகளிராவர் என்றூர். மேலும் மறுக்கக் கூடாது என்பதனை 'அந்தணன் புலவன் கொண்டு வந்தனனே' என அந்தணனாகிய புலவன் எனக் கூறினர்.

" இவர்யார் என்குவையாயின் இவரே
ஊருடன் இரவலர்க்கு அருளித் தேருடன்
முல்லைக்கு ஈத்த செல்லா நல்லிசை
படுமணி யானைப் பறம்பின் கோமான்
நெடுமாப் பாரிமகளிர் யானே
தந்தை தோழன் இவர்என்மகளிர்
அந்தணன் புலவன் கொண்டுவந்தனனே " (புறம். உ0க)

இவ்வாறு கூறுவதை நோக்க, அந்தணர் என்பவர் அறிநெறி வழுவாது வாழும் தன்மையுடைய புலவர்கள் ஆவார்கள், என்பது நாம் அறியலாம். அந்தணர்கள் ஏற்றல் மட்டும் உடையவர்கள் அல்லர். அந்தணராகிய அப்புலவர்கள் ஒவ்வொரு அரசனிடமும் சென்று சென்று செந்தமிழ்ப் பாக்களைப்பாடி, பெற்ற பரிசிலை தாம்மட்டும் உண்டு மகிழாது, உற்றூரும் உறவினரும் பெற்று மகிழும்படி, வாழும்

வள்ளல் தன்மை யுடையவர் என்பதனை, பெருஞ்சித்திரனார் என்னும் புலவர் குமணனிடம் சென்று, தன் வறிய நிலை தீர வாங்கி வந்த பொருளை தன் மனைவியிடம் தந்து, "நின்னை விரும்பி வாழ்கின்றவர்களுக்கும், நீ விரும்புகின்றவர்களுக்கும், கற்பு வழா நின் சுற்றத்தினருக்கும், நமக்கு வறுமைக் காலத்து தந்து உதவி நின் உதவியை எதிர் பார்ப்போருக்கும், இவர் களுக்குத்தான் கொடுக்கவேண்டுமென எண்ணாது, என்னைக் கேட்டுத்தான் கொடுக்கவேண்டுமென நினையாது இப் பொருளை வைத்திருந்தால் இன்னும் நெடுநாள் நன்னிலையில் வாழலாம் என உள்ளத்தில் கொள்ளாது. எல்லோருக்கும் கொடுப்பாயாக" என பெருஞ்சித்திரனார் கூறுவதால், இவர் களிடத்தும் ஈதல் தன்மை உண்டு என அறியலாம்.

"நின்நயந்து உறைநர்க்கும் நீநயந்துஉறைநர்க்கும்
பன்மாண் கற்பினின் கிளைமுதலோர்க்கும்
கடும்பின் கடும்பசிதீர யாழநின்
நெடுங்குறி எதிர்ப்பை நல்கியோர்க்கும்
இன்னோர்க்கு என்னாது என்னொடுஞ்சூழாது
வல்லாங்கு வாழ்தும் என்னாதுநீயும்
எல்லோர்க்கும் கொடுமதிமனைகிழ வோயே
பழந்தூங்கு முதிரத்துக்கிழவன்
திருந்துவேல் குமணன் நல்கியவளனே" (புறம். கசு௩)

முத்தமிழும் ஒருங்கே உள்ள செந்தமிழ்க் காப்பியமாகிய சிலப்பதிகாரத்தில் "தற்காத்துத் தற்கொண்டாற் பேணி தகைசான்ற—சொற்காத்துச் சோர்விலாள் பெண்" என்ற வள்ளுவத்திற்கு இலக்கணமாகிய கண்ணகி மதுரை மாநகரில் வாழத் தலைப்பட்டு, தன் கணவனாகிய கோவலனுக்கு குமரி வாழையின் குருத்தகம் விரித்து அமுதம் படைத்து, உண்ட கோவலனுக்கு அடைக்காயும் சுருளும் தந்து மகிழ்ந்திருக்கும் வேளையில், கற்பின் கொழுந்தாகிய கண்ணகி காவிரிப்பூம் பட்டினத்தில் வாழ்ந்த சமயத்தில், கோவலன் மாதவியின் கலையழகைக் கண்டு பிரிந்ததினால் இல்லறம் நடத்தும்பொழுது இழந்தனவாக அவள் கூறுவது,

"அறவோர்க் களித்தலும் அந்தணர் ஓம்பலும்
துறவோர்க் கெதிர்தலும் தொல்லோர் சிறப்பின்
விருந்தெதிர் கோடலும் இழந்த என்னை"
(கொலைக்களக்காதை. 71-73)

என்பதாகும். இதில் கண்ணகி கூறும் அறவோர் யார்? அந்தணர் யார்? துறவோர் யார்? வள்ளுவர்,

"துறந்தார்க்கும் துவ்வா தவர்க்கும் இறந்தார்க்கும்
இல்வாழ்வான் என்பான் துணை" (திரு—சுஉ)

எனக் கூறும் பாவினை நோக்கும் பொழுது அதற்குப் பரிமேலழகர் "களைகணனவரால் துறக்கப்பட்டார்க்கும் நல் கூர்ந்தார்க்கும், ஒருவருமின்றித் தன்பால் வந்து இறந்தவர்க் கும் இல்வாழ்பவன் துணையாவான்" என்பார். (தொடரும்)

"எண்ணம்"

ந. செகதீசன்
தமிழாசிரியன், ம. இ. உ. பள்ளி, ஈரோடு.

எண்ணமும் மனிதனும் :

மனிதன்தான் ஆறுவது அறிவென்னும் பகுத்தறிவு வாய்க்கப் பெற்றவன். உயர்திணையென்னும் தகுதிக்குரிய மனிதனின் மனத்தின் அறிதல் தன்மையை அறிவுகளின் முடிவுப்படியாக ஆசிரியர் தொல்காப்பியர் வைத்துப் போற்றுகின்றார். இதனை,

"ஒன்றறி வதுவே உற்றறி வதுவே
இரண்டறி வதுவே அதனொடு நாவே
மூன்றறி வதுவே அவற்றொடு மூக்கே
நான்கறி வதுவே அவற்றொடு கண்ணே
ஐந்தறி வதுவே அவற்றொடு செவியே
ஆறறி வதுவே அவற்றொடு மனமே
நேரிதின் உணர்ந்தோர் நெறிப்படுத் தினரே"

என்னும் மரபியல் நூற்பா விளக்காநிற்கும். நேரிதின் உணர்ந்தோர் நெறிப்படுத்தியதாகத் தொல்காப்பியர் கூறுமாற்றால், அவருக்கு முற்பட்ட தமிழறிஞர் பலரும் ஆய்ந்தறிந்து தெளிந்த உண்மை இஃதென்பதும் தெளிவாகின்றது. இஃதேயுமன்றி, இந்நூற்பாவிற்கு உரைவரைந்த ஆசிரியர் இளம்பூரணரும், 'மனத்தினா லறியப்படுவது இதுபோல்வன வேண்டுமெனவும், இது செயல் வேண்டுமெனவும், இஃது எத்தன்மையெனவும் அனுமானித்தல்," என எழுதிச் செல்வதாலும் எண்ணும் இத்தொழில் மனித அறிவின் தொடர்புடைய மனத்தாலன்றி ஆகாதென்பதும் போதரும்.

'மாவும் மாக்களும் ஐயறிவினவே' என மனவுணர்வு மாட்சியும், எண்ணுதல் தொழிலும் அற்றவரை, 'மாக்கள்' எனக் குறித்து அஃறிணைப் பொருளோடு ஒப்பவைத்து எண்ணுகின்றார் ஆசிரியர் தொல்காப்பியர்.

"அச்சமே கீழ்கள தாசாரம் எச்சம்
அவாவுண்டே லுண்டாஞ் சிறிது"

"சொல்லப் பயன்படுவர் சான்றோர், கரும்புபோல்
கொல்லப் பயன்படும் கீழ்"

இவ்விரு குறட்பாக்களின் மூலம் வள்ளுவப் பெருந்தகை, மக்கட்குரிய உயர்வெண்ண மற்றவரை அஃறிணைப் பொருள்களாகவே கருதுவதை நாம் உணர்ந்து, எண்ணுந்திறத்துயர்வாலேயே மக்கள் மாண்புறுகின்றனர் என்று தெளியலாம்.

மக்கள் வடிவம் பெற்றும் உணர்வுக்குறையுடையவர் விலங்கினத் தன்மைகளுற்று, வாழ்வர். அவர் வயமுள்ள அறிவு பிறர் கூரையில் தீக்கொளுத்தும் கொள்ளியாக நின்று அழிவைப் பயக்கும். அவரினும் சற்றே திருந்தியவர் வயமுள்ள அறிவு குளிர்காய் நெருப்பெனப் பயன்படும். அவர் சில காலம் எண்ணியும், சில காலம் எண்ணாமலும் வாழ்பவர். தன்னலக் கருத்தாலும், தற்காப்பு நோக்கத்தாலும், தேவையுறுங்கால் எண்ணுவதும், அஃதொழிந்த வழி எண்ணாமையும் அவர் தம் இயல்பாம். குளிரின் நெருப்பருகே செல்லலும், குளிராக்கால் நெருப்பினின்று நீங்குவதும்போல அவர்களின் சிந்தனை வாழ்வு அமையும். நிறை மனிதன் வயமுள்ள அறிவு நெருப்பு, உணவாக்கும் நெருப்புப் போலவும், உலைக்கூட நெருப்புப் போலவும் ஆக்கப் பணிக்கே பயன்பட்டுச் சிறக்கும். எனவே, தாழ்ந்த எண்ணங்களால் வெற்றிபெற்று மகிழ்வதைவிட, உயர்ந்த எண்ணங்களோடு போராடி வாழ்வதே சீரிய வாழ்வாம். சீரிய வழிகளில் எண்ணங்களைச் செலுத்தும் அறிவே அறிவாம் என்பதனை,

"சென்ற விடத்தாற் செலவிடா தீதொரீஇ
நன்றின்பா லுய்ப்பது அறிவு"

எனுங் குறளில் வள்ளுவர் குறிக்கின்றார்.

எண்ணமும் அறிவும்

ஒருவரின் எண்ணங்களுக்கு அவருடைய அறிவே அடிப்படையாகின்றது. அறிவு நிலைக்கேற்ப எண்ணுதல் அமைய அவ்வெண்ணங்களின் தரத்திற்கும் திறத்திற்கும் தக்கவாறு செயல்கள் உருப்பெறுகின்றன. எண்ணங்கள் ஒருவனின், வாழிடம், சூழ்நிலை, காலம் ஆகியவற்றின் தூண்டுதல்களுக் குட்பட்டே எழவல்லன. எனவே, ஒரு தனி மனிதனின் எண்ணங்களுக்கு முழுப் பொறுப்பு அவனுடைய தனித்த அறிவுடைமையே என்று சாற்றி விடுதல் இயலாது. சிற்சில சமயங்களில், மிகப் பேராற்றல் படைத்தவர்கள், தமக்கென வொரு தனித் தன்மையை உருவாக்கி மெருகேற்றி வளர்த்துக் கொண்டு, சூழ்நிலை, வாழிடம், வாழ் காலம் ஆகியன கடந்த எண்ணங்களை எண்ணுதலும் உண்டு. உடல் வாழ்வு போலவே எண்ண வாழ்வும், தேய்வு, வளர்ச்சி, மாற்றம், முதிர்ச்சி ஆகியன பெறும். தனி மனிதனின் எண்ண வாழ்வு எய்தும் இந்நிலைகள் மக்கட் கூட்டமும் அடையாமலிருத்தல் இயலாது. மாற்றமில்லாத எண்ணங்களைக்கொண்ட அறிவு, வளர்ச்சியும் வாழ்வும் பெறும் தகுதியை இழந்துவிடும்.

அறிவு எண்ணங்களை உருவாக்கும் ஒரு தொழிற்கூடம். எண்ணங்களுக்குரிய மூலப் பொருள் என்னும் நுண் எண்ண அணுக்களைத் திரட்டித் தருவதுதான் வாழ்க்கை என்று கூறி

விடலாம். இவ்வெண்ண அணுக்களால் ஆகியவன்தான் எண்ணங்களை ஆளும் மனிதன். எண்ண அணுக்களைத் திரட்டும் செயலைத்தான் 'நுகர்வு' அல்லது 'துய்ப்பு' என்று குறிப்பிடுகின்றோம்!

எண்ணமும் கருத்தும்:

எண்ணம் என்பது அறிவில் விழும் ஒரு நுகர்வுக் கோடேயாம்! ஒன்றைப் பற்றிய அறிவு, அதனோடு தொடர்புடையனவற்றை முயன்று மூளையில் பதித்து முழுமை நாடும் செயலே எண்ணுதற்றொழில் என உளநூலறிஞர் கூறுவர். ஒரு பொருளைக் காணும்பொழுது புறக்கண் புலனுணர்வால் நம் மூளையில் ஏற்படும் பதிவாகிய எண்ணம், 'கருத்து' என்னும் பெயரைப் பெறுது! இவ்வெண்ணங்களைக் கருவாகக் கொண்டு உருவாகும் ஒன்றே 'கருத்து' எனுமக் கவின்சால் பெயரைப்பெறும்! எண்ணங்கள் வலிமையுற்று முழுமையடைவதால் கருத்துக்கள் பிறக்கின்றன. இக்கருத்துக்கள் தம் பண்பிற்கேற்ப மனிதனின் உயர்வையோ, தாழ்வையோ சமைக்கவல்லனவாகின்றன. ஆகலான், நல்ல கருத்துக்களுக்கு நல்ல எண்ணங்கள் அடிப்படையாகின்றன.

அறிவின் மேற்பரப்பில் எண்ணங்கள் நிகழ்ந்துகொண்டேயிருக்க, அவற்றை அறிவின் கீழ்ப்பரப்பு, கருத்தாக்கிக் கொண்டேயிருக்கின்றது. கருத்தை உருவாக்காத எண்ணங்களை உடைய அறிவு, புனல் பெருகியோடி வடிந்து போன வெற்றாறு போல வீணே கிடக்கும்! எண்ணங்களின் பரப்பில் குழப்பமும், ஆய்வும் ஓயாமல் நிகழ்ந்துகொண்டிருக்கும்! கருத்துப் பரப்பில், உரமும், உறுதியும், படிந்து பெரும்பாலும் உலைவுகளடங்கிக் கிடக்கும்.

ஒருவர், எண்ண நிலையில் தன் அறிவின் ஈடுபாட்டுப் பயனை எளிதிலே மாற்றிக்கொள்ளுதல் இயலும். முடிவு நிலைக்கு இட்டுச் செல்லும் கருத்து நிலையில் மாற்றங்கள் எளிதில் நிகழ்வதில்லை.

எண்ணமும் செயலும்:

உலகை மனிதனது செயல்கள் ஆளுகின்றன. மனிதனுடைய செயல்களை எண்ணங்கள் ஆளுகின்றன. எனவே, நுணித்து நோக்குவார்க்குச் செயல்களின் பயன்கள் எல்லாம் எண்ணங்களின் பயன்களே என்பது தெள்ளிதின் புலப்படும். எண்ணங்களின் விளைவாகிய கருத்துக்களின் முடிவு நிலையில் உருவாகும் செயல்கள் உறுதிப்பாடுடையனவாய், விரைவும் தெளிவும் கொண்டு இயங்கும்! எண்ணங்களின் வளர் நிலையில் முளைத்தெழும் செயல்கள் சில சமயங்களில் 'திக்குத்

தெரியாத காட்டில்' அகப்பட்டு நிற்றலுமுண்டு. அங்ஙனம் அகப்படாது வலிமை தாங்கி, நலிவு நீக்கிச் செல்ல, அந்நிலையில் நூலறிவும், மேலோர் தொடர்பும் இன்றியமையாதனவாம்! ஆகலாற்றான் கற்றவர் செயல்களிலும், நல்லினஞ் சார்ந்தோர் செயல்களிலும் உலகம் நம்பிக்கை கொள்ளுகின்றது.

'ஒருவரின் பெருமைக்கும் சிறுமைக்கும் அவர் தம் கருமமே கட்டளைக்கல்' என்றார் வள்ளுவர். அக்கருமத்திற்கோ எண்ணமே கட்டளைக் கல்லாகும். நுணங்கிய அறிவினராகிய வள்ளுவர் உயர்வின் நீட்டம், உள்ளும் எண்ண நீட்டத்திற் கேற்ப அமையும் என்று கூறினர்!

"வெள்ளத்தனைய மலர்நீட்டம் மாந்தர்தம்
உள்ளத் தனைய துயர்வு"

இக்குறளிலுள்ள 'உள்ளம்' என்னுஞ் சொல்லுக்கு 'நெஞ்சு ஒருப்பாடு' எனக் காலிங்கர், உரைவரைகின்றார். 'நெஞ்சு ஒருப்பாடு' அல்லது 'ஊக்கம்' எண்ணத்தின் திண்மையே என்பது கூர்ந்து நோக்கின் வெளிப்படும். எனவே, எண்ணமுயரக் கருத்துயரும், கருத்துயரச் செயலுயரும்; செயலுயரச் சீர் உயரும், சீர் உயர வாழ்வுயரும்!

தனித்த எண்ணம் :

கல்வி, அறிவை வளர்க்கும் கருவி! கற்குந்திறனுக்கேற்பப் பெருகும் அறிவை வள்ளுவர், 'தொடுமணற்கேணி' என்று கூறுகின்றார்! அறிவு, எண்ணித் துணிந்து ஏற்றவாறு செயலாற்ற ஏற்ற துணையாகும்! அங்ஙனம் துணையாகக் கல்வியறிவுடையவரை நம் வள்ளுவனார் 'கற்றும் அறிவிலாதார்' என்று இழித்துரைக்கின்றார்! கற்றுங்கற்றவராக நிற்க வல்லவர்கள் பெரும்பாலும், நீர்வழிச்சாயும் கோரைபோலாது, எதிர் நீத்தம் கொள்ளும் நிலையினரேயாவர்! வாழ்வியல் கூறுபாடுகளால்—துன்பம், வறுமை, அச்சம், காமம், கழிகண்ணோட்டம் ஆகியவற்றால் நெகிழ்ச்சியுற்று, அறிவு வலிமை குறைந்து, நெளிந்தும், வளைந்தும், தணிந்தும் பணிந்தும் செல்லுகின்றவர்களே மக்கட் கூட்டத்தில் மிகுதி! இத்தகைய மக்களிடையே வாழும் ஒருவர் தன் தனித் தன்மை இழந்து விடாமல் எண்ணி வாழ நெஞ்சுரமும், நிலைகலங்கா வன்மையும் சாலப் பெற்றிருத்தல் வேண்டும். அவர் தனக்கென்று வகுத்துக் கொண்ட எண்ண வட்டத்தில் பல நாட்கள் ஆய்ந்து தோய்ந்து பழகித் தெளிந்து கருத்து முதிர்ச்சி பெறுகின்றனர். அவர் ஒப்பவர்களாலேதாம், புதுமைக் கருத்துக்கள், சீர் திருத்தச் செவ்விய நோக்கங்கள், செயல்கள் எழுந்து, மக்கட்

கூட்டம் மெல்ல மெல்ல முன்னேற்றங் காணுகின்றது! காலப் போக்கில் பெரும்பான்மை மக்களிடையே தம் வலிமையால், அவர்களின் எண்ண வட்டத்தை ஊடுருவிச் சென்று தாக்குதல்களை உண்டாக்கி, அதிர்ச்சியை உண்டுபண்ணும். அப்புதுமை எண்ணங்கள் அவ்வக் காலங்களில் வெறுப்பும், விரட்டலும் பெறினும் பின்வருந் தலைமையினருக்கு வளர்ச்சியைக் கொடுக்க வல்லதாகின்றன! எல்லாக் காலங்களிலும், குழுமனப்பான்மையில் தம்மை இழந்துவிடாமல் தனித்த தன் சிந்தனை வட்டத்தில் உலவிவரும் ஆற்றல் பெற்ற அறிஞர் சிலரோ, பலரோ வாழ்தல் உண்டு என்பதனை வரலாறு நமக்குத் தெளிவுறுத்துகின்றது!

சார்பு எண்ணம் :

நிலத்தியல்பால் நீர்திரியுமாறு போன்றே சார்பியல்பால் எண்ணங்கள் திரியும். சார்ந்திருக்கும், சமயம், கட்சி, காலம், மக்கட்குமுகியம் ஆகியவற்றின் எண்ணங்களையும் கருத்துக்களையும் அப்படியப்படியே ஏற்றுக்கொண்டு, எளிதில் தனித்தன்மை துறந்து, இணைந்து பழகிக்கொள்வதே பலருக்கும் எளிமையான செயலாகத் தெரிகின்றது. இத்தகைய மக்களின் வாழ்வில் நன்மை தீமைகள் அவர்களின் ஆற்றலுக்குட்பட்டு விளைவதில்லை. அவர்களில் பெரும்பான்மையினர் எண்ணுதலைத் தொல்லைதரும் தொழிலாகக் கருதிவிடுகின்றனர். சார்பு இன்னதன்மைத்து என்று ஆராய வல்லவர்கள், சார்பெண்ணங்களை ஏற்றுக்கொள்ளு முன்பு நன்கு எண்ணியே துணிவர். இவ்வலிமையற்றோர், சார்பை ஆராய மாட்டாதவராய்ச் சார்பெண்ணங்களைக் கொள்ளு முன்போ, கொண்டபின்போ, எண்ணிப் பார்ப்பதில்லை! 'ஊரோடு ஒத்துவாழ்' எனுங் கருத்தைப் பின்பற்றுவதாக நினைத்து, சார்பெண்ணந் தழுவுதல் நீடித்துப் பயன் தருவதில்லை! இச்சார்பெண்ணம் படைத்தோர் எழுந்தாலும் எழுவர், வீழ்ந்தாலும் வீழ்வர்! எழுச்சியில், உணர்ந்து எழலும், வீழ்ச்சியில் தடுத்துத் திருத்திக் கொள்ளுவதும் அவர்களால் எளிதிலே இயலாது. இத்தகையவரை நம்பி நிற்கும் எந்த நாடும் முன்னேற்றமடைய இயலாது. பின்னேறினும், அம்முன்னேற்றம் அடிப்படை வலிமையற்றதாகலின் எந்த நேரத்திலும் வீழ்ந்து படலாம்.

எண்ணமும் கல்வியும் :

கல்வி என்பது ஒரு நுகர்வே! 'கற்பன கசடறக் கற்பதால்' அந்நுகர்வு சிறந்து அறிவெனும் ஆழ்கயத்தில், முகையவிழும், நல்லெண்ண நறுமலர்கள் தீந்தேன் ததும்பப் பூத்துக் குலுங்கும். இத்தகு மணமலர் மனத்தடம் பொதுள

உதவ வல்ல நூலை வள்ளுவர் 'இலங்குநூல்' என்று குறிப்பிடுகின்றார்! சான்றோரின் கருத்துக்களோடு உறவுகொண்டு தன் எண்ணங்களை உருவாக்க, மெருகேற்ற, உறுதியேற்ற, உயர்ந்த நவில்தொறும் நயம்பயக்கும் நூல்களை நாடுதல் வேண்டும். கற்று எண்ணுவதும், எண்ணிக் கற்பதும் அறிவுத் துறையின் இரு கண்களெனப் போற்றத் தகுவன. கற்காமல் எண்ணுவது தீது; எண்ணமல் கற்பது வீண்.

அச்சம், தன்னலம், பழைமைப்பற்று. பிடிவாதம், இவற்றால் எண்ண மறுப்பது தன்னுயர்வைத் தானே தடைப்படுத்திச் சிந்தனைத் தகுதியை இழந்துவிடச் செய்கின்றது. இப்பண்புடையவர், கற்றபின்னும் சிந்திக்க முன்வராமையினாலேதான் வீடும், நாடும் திருத்தமின்றிக் கிடக்கின்றன. கல்வியைப் பயன்படுத்திக் கொள்ளாத இவர்களை, அவ்வப்போது தோன்றுகின்ற அருள் கனிந்த நெஞ்சினர் வழிகாட்டிச் செல்லப்படுகின்ற அல்லல்களுக்கு அளவேயில்லை!

• •

கல்வி எண்ண அலைகளை வீசுகின்ற ஒரு கடல்! அக்கடலடியே கிடக்கும் கருத்து முத்துக்களை எடுக்க அறிவுப் படகேறி, முயற்சித் துடுப்புகைத்து விரைந்து செல்லல் நாட்டவர் நற்கடனும்! மூடநம்பிக்கை என்னும் சூறவளியை வென்று, குழப்பச் சுழல் வாய்ப்படின், வென்று கடந்து, முத்தெடுத்து வருவோரே முழு வாழ்வு வாழ்பவராவர்!

முடிவு:

எண்ணங்களின் வண்ணமாய் மனிதன் மாறுகின்றான். (What man thinks that he becomes) எண்ணங்களை இயக்கும் அறிவு வண்மை கொண்டு, கல்வி, வாழ்வுத் துய்ப்பு இவற்றில் படிந்து, தனித்தன்மை பேணி, சார்பு நிலை அறிந்து, ஏற்பன கொண்டு, ஏலாதன தள்ளி, கருத்துக்களை உருவாக்கி வாழ்வை உயர்த்துதல் வேண்டும்!

எண்ணமே 'மனிதன்' என்னும் மாண்பைத் தரும், உயிர்ப் பொருள்! எண்ணமே கருத்துக்களின் தாய்! எண்ணமே மெய்ப்பொருள் உணர்த்தும் விளக்கு! எண்ணமே தனித் தன்மைக்கு அடித்தளம்! எண்ணமே புதுமைக்கு வித்து! எண்ணமே உயர்வுக்கு உரம்! எண்ணமே வாழ்க்கை! வாழ்க்கையே முழுமை பெறவேண்டிய ஓர் எண்ணம்!

சென்ற இதழின் தொடர்ச்சி:

அறிவன் கோயில்

வித்துவான் சி. கோவிந்தராசனர்,
தமிழ் விரிவுரையாளர், கரந்தைப் புலவர் கல்லூரி, தஞ்சை.

முதுமக்கள் புதைவடை:

மனிதன் என்ன செய்தான்? என்னும் வினவிற்குரிய விடையாக நின்று வரலாற்றை வளரச் செய்யும் இலச்சினைகள் பலவுண்டு. அவற்றுள், சிற்றண்ணல்வாயில் மலைக்குத் தெற்கே படர்ந்து சூழ்ந்துள்ள கரடுமுரடான கரம்பைப் பகுதியில் காணற்கரிய காட்சிகளாக மண்ணுள் மறைந்து நின்று அறிஞரின் முயற்சியால் வரலாற்றை நிறைவடையச் செய்யும் சமண முதுமக்கள் கல்லறைகளும் ஒன்ருகும். இங்குள்ள முட்புதர்கட்கிடையே செம்மை நிறமுள்ள உருக்குப் பாறைகளால் வட்டமான வடிவில் அங்கொன்றும் இங்கொன்றுமாகக் கோலப்பட்டுள்ளன. ஒவ்வொரு வட்டத்தின் நடுவிலும் நான்கு பலகைக் கற்களால் சதுரமாகத் தரையில் உறையிடப்பட்டு மண்மூடி நிற்கும் கல்லறைகள் காணப்படுகின்றன. அறையமைப்பிற்குரிய பாறைப் பலகைகள் சிற்றண்ணல்வாயில் மலையில் கிடைக்கும், வெண்மையும் மஞ்சள் இரேகையும் பொருந்திய பாறைகளாகும். அறையைச் சுற்றிக் கோலப்பட்டுள்ள உருக்குச் செம்பாறைக் கற்கள் பிற மலைகளினின்றும் கொண்டு வரப்பட்டுள்ளன. இவ்வாறு, அங்குக் கிடைக்காத செம்பாறைக் கற்களைக் கொண்டு கோலப்பட்ட தன் கருத்து, கல்லறைகளின் இடத்தை எல்லையிடவும் எக்காலத்தும் சரியாக அறிந்து கொள்ளவுமே யாம்.

முதுமக்கள் புதைவடை

இக் கல்லறைகட்கு எல்லைகளாகப் பொருத்தப்பட்டிருக்கும் பாறை வட்டங்களின் விட்டம் பத்து முதல் பதினைந்து அடிகட்கு மேலில்லை. நடுவே அமைக்கப்பட்டுள்ள கல்லறையின் பாறைத் தகடுகள் நான்கடிக்கு மேற்படாத அகலமும் ஏழடிக்குக் குறையாத நீளமும் உடையன. இக் கற்றகடுகள் நிலத்தில் புதைக்கப்பட்டுத் தரைமட்டத்திற்குமேல் சிறிதளவு வெளியே தோன்றுமாறு பொருத்தப்பட்டுள்ளன. பெரும்பாலும் சதுரமாகவே காணப்படும் இக் கல்லறைகளுள் ஒரு சில நீண்ட சதுரமாகவும் உள்ளன. நீண்ட சதுரமான அறைகளின் உள்ளே ஒரு புறமாகச் சிற்றறைகள் அமைக்கப்பட்டுள்ளன. இவ்வாருன அறைகளே முதுமக்களை அடக்கம் செய்த தாழிகள் பொருந்திய இடங்களாம். இவ்வறைகளை ஆராய்ந்தபோது, அதிலிருந்து பொற்காசுகளும் சில அணி கலன்களும் இரும்புக் கருவிகளும் தாழிகளும் கிடைத்துள்ளன. இப்பொழுது அப் பழம்பொருள்கள் புதுக்கோட்டையைச் சேர்ந்த திருக்கோகரணத்திலுள்ள பொருட்காட்சிச் சாலையில் இடம் பெற்றுள்ளன. இன்று புதை பொருளாகக் கிடைத்துள்ள பொருள்கள் யாவும், அன்று கல்லறைகளில் புதைக்கப்பட்ட பெருமக்களின் உடைமைகளாகும்.

புதுக்கோட்டைச் சீமையில் உள்ள மோசகுடி, வலமங்கலம், செம்பாட்டூர், தொண்டைமான், நல்லூர், செட்டிப்பட்டி அம்மாசத்திரம் ஆகிய இடங்களில் சமணரின் சிற்பங்களும் சிலைகளும் கண்டெடுக்கப்பட்டுள்ளனவென்பதை முன்னர் கூறினோம். அத்துடன் செட்டிப்பட்டி, வலவம்பட்டி போன்ற இடங்களிலும், கொடும்பாளூரிலும், சிற்றண்ணல்வாயில் மலைப் பகுதியில் காணப்படும் முதுமக்கள் புதைவடைகளைப் போன்ற கல்லறைகள் காணப்படுகின்றன. சமணர்கள் வாழ்ந்த இடங்களென சரித்திரங்கொண்ட இப்பகுதிகளில் காணும் கல்லறைகள், சிற்றண்ணல் வாயிலில் உள்ளவற்றைப் போன்ற அளவிலும் அமைப்பிலும் இருப்பதைக் கொண்டே, இவைகள் பெரும்பாலும் சமணர்கட்குரிய இடுகாடென்று கூறுதற்கு இயலுகின்றது.

குரங்குப் பட்டறை :

தரைமட்டத்திற்கு மேல் எழுப்பவேண்டிய அளவிலுள்ள சுவராலான சதுக்கங்களையும், தொழிற்படும் அடைவிடங்களையும் 'பட்டறை' என்று அழைப்பதுண்டு. இப்பெயரான் கொல்லன் பட்டறை, கல்பட்டறை என்பன போன்ற பட்டறைகள் நாட்டில் வழக்கத்தில் இருந்து வருகின்றன.

முதுமக்கள் புதைவடைகள் நிறைந்துள்ள கரம்பை நிலத்தின் ஒரு பகுதியினையே குரங்குப் பட்டறை என்பர்.

இங்கு, புதைக்கப்பட்டு தரைமட்டத்திற்குமேல் நீண்டு நிற்கும் கற்பலகைகள் காணப்படுகின்றன. இப்பகுதி சற்று மண்மேடாக இருந்திருக்க வேண்டுமென்பதைச் சூழ்நிலையால் அறியலாம். ஆயிரம் ஆண்டுகட்கு முன்னர் இங்கு கற்பலகைகளால் அமைக்கப்பட்டிருந்த முதுமக்கள் அறைகளுடன், அவற்றைச் சூழ்ந்துப் பாது காவலாக நின்ற பாறைகளாள சுவரும் இன்று சிதைவடைந்த நிலையில் காணப்படினும், எஞ்சிய பகுதிகளைக் கொண்டு பழைய தோற்றத்தை உருவகித்தறிய இயலுகின்றது. இப்பொழுது 'பாதுகாக்கப்பட்ட சின்னங்கள்' என்னும் அறிவிப்புப் பலகை இப் பகுதியில் இடம் பெற்றுள்ளது.



குரங்குப் பட்டறை என்னும் சமண முதுமக்கள் கல்லறை

இப்பகுதி கற்கால மனிதனின் வாழ்க்கைக்கோர் எடுத்துக்காட்டாக அமைந்துளது. மிகவும் முதுமையடைந்த சமணத் துறவிகள் மலைமீதுள்ள இயற்கைக் குகைகளில் சென்று வாழ இயலாமையால், அம்முதியவர்களை மற்றத் துறவிகள் அடிவாரத்தில் அமைக்கப்பட்டிருந்த பாறையறைகளில் அமர்த்துவர் போலும்! நாளும் அவர்கட்கான சிற்றுதவிகள் சமணச் சாரணரால் கிடைக்க, கிழத்துறவிகள் தங்களின் எஞ்சிய மூச்சை யோக நிலையிலிருந்து கழித்தனர். அவர்களுடைய உடலை அவ்வறையிலேயே வைத்து மற்றொரு பாறையால் வாயிலை அடைத்து மண்ணிட்டு மூடுவது, தள்ளாத வாழ்க்கையை மேற்கொண்ட சமண முனிவர்கட்கிருந்த இறுதிச் சடங்காக இருக்கலாம். சமண சமயத் தீர்த்தங்கரர்களும் தலைவர்களும் கற்படுக்கைகளிலமர்ந்து உண்ணா நோன்பிருந்து 'சல்லேகனை' என்னும் இறுதி நிலையைத் தவ வழியிற்பெற, மூப்படைந்த சமணத் தொண்டரும் துறவியரும் கல்லறைகளில் அமர்ந்து வாழ்க்கையை நீத்தனர் போலும்!

பன்னூறு ஆண்டுகட்குப் பின்னர் இப்பகுதிகள் மழையால் ஓரளவு கரைந்ததற்பின் அறியா மக்களின் செயலால் சிதைவடையலாயிற்று. அப்பொழுது கற்பட்டறைகளின் நடுவில் எலும்புக் கூடுகள் இருப்பதை கண்ட மக்கள் அவற்றைக் குரங்குகளின் உருவென்றும், அவ்வாறன கல்லறைகள் தொகுதியாக அடைந்து இருந்தமையால் 'குரங்குப் பட்டறை' என்றும் கூறிவந்திருக்கின்றனர்.

மதிப்பில்லா மதிப்பால் சென்றகால மன்னர்களுடைய வரலாற்றைக் காட்சி சாலையில் நின்றுரைக்கும் பழைய நாணயம் போல், சிற்றண்ணல் வாயிலின் சூழலில் அமைந்து, சமணப் பெருமக்களின் புதைவடையும் பட்டறையுமாகக் காட்சிதரும் இப்பகுதியை ஒரு காலத்தில் குரங்குகள் ஆண்டனவென்றும், இவ்விடங்களில் புதையல்கள் உண்டென்றும் மாறுகக்கருதி மாறுது கூறும் மக்கள் இன்றும் அங்கு உள்ளனர். அவர்கள் இப்பகுதியைக் குரங்குப் பட்டறை என்றழைப்பினும், வரலாற்றுக் கண்ணாடியில், சமண முதுமக்களைக்கொண்ட புதைவடையும், சமணத் துறவிகள் இறுதி நிலையடைந்த பட்டறையுமாகவே இப்பகுதி தோற்றமளிக்கின்றது.

தொலைக் காட்சிகள் :

சிற்றண்ணல்வாயில் மலைமீதிருந்து நாற்புறமும் நோக்குவோமாயின் இயற்கையன்னையின் எழிலைக் காணலாகும். மலையினைச் சூழ்ந்துள்ள கரம்பில் பச்சைப்பசேலென்ற புதர்கள் மரகதக் குன்றுகளெனப் பாங்குடன் காட்சிதர, தொலைநோக்கிற்கு வெள்ளித் தகடுகளை விரித்தாற்போன்று நெடிய ஏரிகள் தெள்ளிய நீருடன் தோற்றமளிக்கின்றன. கிழக்கே கட்பார்வைக் கெட்டிய வரையில் புதரும் வயலுமாக விரவிநிற்க, இடையிடையே சிற்றூர்கள் காணப்படுகின்றன. அவை, பெருஞ்சுனை, திருவேங்கைவாயில் என்னும் சிவத்தலங்களாம். அவற்றிற்கப்பால் தொலையில் புகை நடுவண் தோன்றும் தீப்பொறிகளைப்போல உயர்ந்துள்ள மாடங்களின் முகடுகள் தெரிகின்றன. அதுவே புதுக்கோட்டை மாநகர்.

வடகிழக்கே பல குன்றுகள் இணைந்து தெரிகின்றன; அதுவே நரந்த மலைத்தொடர். வடக்கே மருதியின் குறுகியெழுந்த மாடங்களும் தமிழகத்தார் கோபுரமும் எல்லையிட சிற்றூரொன்று தோன்றும்; அதுவே சிற்றண்ணல்வாயில் மலையுடன் தொடர்புடைய அன்னவாசல் என்றழைக்கப் படும் அண்ணல்வாயில். மேற்கே மேகப்படலம் பொருந்தியதாக இரண்டு மலைகள் தோன்றுகின்றன; அண்மையில் தோன்றுவது வரலாற்றுப் புகழ்பெறும் கல்வெட்டுக்கள்

நிறைந்துள்ள குடுமியான் மலை. அதற்கப்பால் தோன்றுவது விராலிமலை. தென்மேற்கே தொலைக் காட்சியாகச் சுட்டியறிவது பிரான்மலை. அதனையே கடையேழு வள்ளல்களுள் ஒருவனான வேள்பாரி என்னும் குறுநில மன்னன் ஆட்சி செலுத்திய பறம்புமலை என்பர். தெற்கே மரங்களும் வயல்களும் ஏரிகளுமே தோன்றுகின்றன. அவற்றினூடே மலைப்பாம்புபோல் நெளிந்து செல்லும் சாலைகளையும் காணலாகும். இவ்வாறாகத் தொலைக் காட்சிக்கு எட்டிய இடங்களுள் சிற்றண்ணல்வாயில் மலையைச் சூழ்ந்துள்ள நல் லிடங்களையும் அவைபற்றிய பழமையினையும் பற்றித் தெளிவது சமணர் வரலாற்றுக்கோர் சார்பாகும்.

பெருஞ்சுனையூர் :

இச்சிற்றூர் சிற்றண்ணல் வாயில் மலையினின்றும் புதுக் கோட்டைக்குச் செல்லும் வழியில் இரண்டு கல் தொலைவில் அமைந்துள்ளதாகும். இவ்வூரின் நிலவளம் பெரும்பான்மையும் பாறையேயாகும். மெய்வருந்தப் பாறைகளை உடைத் தெடுக்கும் தொழிலாளரும், நெற்றி வியர்வையுடன் ஆழத்தி லிருக்கும் நீரையும் முயற்சியால் சேர்த்துப் பாய்ச்சும் உழைப் பாளிகளும் இவ்வூரில் வாழ்கின்றனர். ஊரிற்குக் கிழக்கெல்லை யான பாறை மேட்டின் மேல் கற்றளியொன்று பழமையான தாகக் காணப்படுகின்றது. இடிந்து கொண்டிருக்கும் இக் கோயிலின் நடுவே அமைக்கப்பட்டுள்ள சிவலிங்கம் நெடிய தோற்றமுடையது. இதனையடுத்துச் சிறு சிறு கற்கோட் டங்கள் இருந்து அழிந்ததற்குரிய சுவடுகள் பாறைத் தளத்தில் தெரிகின்றன. இலிங்கத்தின் அமைப்புடன் எஞ்சியுள்ள சிற்ப நுட்பங்களும் பிற்காலப் பாண்டியரின் காலத்தவை யாகக் காணப்படுகின்றன.

மண்டப வடிவில் எஞ்சியுள்ள கோயிலோடு கூடிய பாறை மேடு மேற்குப் பக்கமாகச் சரிந்து, குழிவாகச் சென்று உயர்ந் திருக்கிறது. இரு புறமும் மேடாக நிற்க இடையே தெற்கு வடக்காக நீண்டு அமைந்துள்ள குழிவுத்தடம் பெரியதொரு சுனையாகவே நீர் நிறைந்துள்ளது. சுனை, தரை மட்டத்திற்குக் கீழாக அமைந்திருப்பதால், அதில் தாமரைக் கொடிகள் படர்ந்துள்ளன. இச்சுனை இங்கு இல்லையென்றால் ஊரில் மக்கள் வாழவியலாது என்ற அளவில் சுனைநீர் அங்குள்ள வர்க்குப் பயன்படுகின்றது.

சுனை என்பது, மலைகளின் அடிவாரத்திலோ மேலோ அமைந்துள்ள நீர் சுரக்கும் பாறைப் புழையாகவும், நீர் நிறைந்த குழியாகவும் இருக்கும். இவ்வூரில் குழியாக அமைந்த தோற்றத்திலுள்ள சுனையே மிகப் பெரியதாக அமைந்திருக் கிறது. எனவே, இச்சுனையை மக்கள் பெருஞ்சுனை என் றழைத்தனர். அத்துடன் ஊரும் இப்பெயராலேயே வழங்கப்

மனோன்மணீய மாண்பு—1

முதற் காட்சியின் மாட்சி

மது. ச. விமலானந்தம், எம். ஏ.,
தமிழ் விரைவுரையாளர் சரபோசி அரசர் கல்லூரி.

தமிழுக்கமைந்த திருமாமணியாய், தமிழ் நாடக உலகிற் கோங்கிய ஒருமாமணியாய் ஒளிரும் மாண்பார் நாடகம் பேராசிரியர் சுந்தரம் பிள்ளை தந்த மனோன்மணீயமாகும். கதையைப் போன்றே நாடகமும் எடுப்பும், தொடுப்பும், முடிப்பும் கொண்டிருத்தல் வேண்டும். நாடகம் புனைவ தென்பது எல்லோர்க்கும் வாய்ப்பதொன்றன்றாம்; அதிலும் நாடகத்தை அனைவருள்ளமும் ஆட்கொள்ளும் வண்ணம் தொடங்குவதென்பது சிலருக்கே சாலும். திறமான புலமையும், தெளிவான சிந்தையும் வாய்க்கப்பெற்ற நல்லாசிரியருக்கே நாடகத்தைச் சிறப்புறத் தொடங்கும் பெற்றி பாங்குற அமையும். நாடகத் தொடக்கமும் (Opening), முடிபும் (Ending) நல்ல வண்ணம் அமைதல் வேண்டும்.

சொற்பொழிவு நிகழ்த்துவோன் எடுத்த எடுப்பிலேயே ஒருசில விநாடிகளில் அவையோரைக் கவர்தல் வேண்டும்; இன்றேல் சொற்பொழிவு சுவைக்காது. அதுபோன்றே நாடகமும் எடுத்த எடுப்பிலேயே (படிக்கத் தக்க நாடகமாயின் ஒரு சில வரிகளிலும், நடிக்கத் தக்க நாடகமாயின் ஒருசில விநாடிகளிலும்) முறையே படிப்போரையும், பார்ப்போரையும் கவர்தல் வேண்டும்—உள்ளத்தைக் கொள்ளை கொள்ளுவதாயும், நெஞ்சத்தில் நீங்காது நிலைபெறுவதாகவும், இதயங் கவர்வதாயும் இருத்தல் வேண்டும்.[1] இம்முறையில் நம் மனோன்மணீய நாடகத் தொடக்கம் எம்முறையில் அமைந்துளது என்பதை ஈண்டு எண்ணுவாம்.

---

1. The play must begin with a short scene or part of a scene either full of life and stir or in some other way arresting.

பட்டு வந்தது. இவ்வுண்மையை, இவ்வூரின் ஒரு பகுதியாகவுள்ள வண்ணான் சுனை என்றழைக்கப்படும் சுனையைச் சார்ந்த பாறையின் மீதுள்ள "குல சேகர தேவர்க்கு யாண்டு நான்காவது பங்குனி ரு-ந பெருவாயில் நாட்டுப் பெருஞ் சுனையூர்......" என்று தொடங்கும் கல் வெட்டால் நன்கு அறியலாம். ஆனால் இன்று அங்குள்ள மக்கள் 'பெருஞ்சினை' என்றே கூறி வருகின்றனர். இவ்வூரையடுத்துள்ள சிற்றூர் 'சிறு சுனை' என்ற நற்பெயரால் இன்றும் வழங்கிவர, பெருஞ் சுனை என்ற பெயர் பெருஞ்சுனையாகியது வியக்கத்தக்கதாயுளது. (தொடரும்)

இதனை எண்ணுமுன்னர் இதயங்கொள வேண்டிய கருத்து ஒன்றுளது. நாடக அமைப்பில் பொதுவாக ஆங்கில நாடக அமைப்பைப் பின்பற்றியும், சிறப்பாக சேக்ஃஸ்பியர் நாடக அடிப்படையைக் கொண்டதாயும் திகழ்கிறது மனோன் மணீயம். இது போன்ற அமைப்பு முறையும் அமைதியும் கொண்ட நாடகம் தமிழ் இலக்கிய வரலாற்றில் இதற்கு முன்னர் இல்லையென்றே இயம்ப வேண்டியுளது. மேலை நாட்டு நாடக அமைதியும், தமிழகப் பண்பும் இணைந்த நிலையில்[1] இனிய முறையில் அமைவது இந்நாடகம் என்பது இதயங்கொள வேண்டிய ஒன்றாகும்.

சிற்சில போது முதல் அங்கம் முதற்களம் மட்டுமோ, அன்றி முதல் இரண்டு களங்களோ, அல்லது முதல் மூன்று களங்களோ நாடகத் தொடக்கம் என்ற நிலையில் அடங்கும். சேக்ஃஸ்பியர் நாடகங்கள் இம்மூன்று நிலைகளிலும் அடங்குவன வாகும். மாக்பெத் நாடகத்தில் முதல் மூன்று களங்கள் நாடகத் தொடக்கமாக[2] அமைகின்றன; புயல்,[3] ஜூலியஸ் சீசர் போன்றனவற்றில் முதல் இரண்டு களங்கள் நாடகத் தொடக்கமாக அமையுமென்பர். எனினும் முதற் களம் ஒன்றே நாடகத் தொடக்கத்தின் நிறைவு பெற்றிருத்தலே தனி சிறப்புடைத் தென்பர் இலக்கியத் திறனாய்வாளர்.

நாடகத் தொடக்கம் நலம் பெற அமைவதற்கு இன்றி யமையாதன மூன்று; 1. உறுப்பினர் அறிமுகம். 2. செய்தி களைத் தருதல். 3. நாடகப் போக்கினைச் சுட்டல். இம்மூன்றும் இணைந்திருந்தால்தான் முதற் காட்சி முதன்மை பெற்று விளங்கும்: நிறைவு பெற்றொளிரும்.

1. இன்றியமையா நாடக மாந்தர்களை நாடக அரங் கிற்குக் கொணர்தல்; அவர்கட்கிடையே அமையும் உறவும் தொடர்பும் உணர்த்தல்; அவர்களுடைய செப்பரும் குணங் களையும் வரலாறுகளையும் செப்புதல் போன்றன இதில் அடங்கும். இவற்றை அறிவதால் இவை கொண்டு இனி வர இருப்பனவும், நடக்க இருப்பனவும் எவையென எதிர்பார்க்க இயலும்.

2. முன்னறிவும் பழங்கதை யுணர்வும் இன்றேல் நாடகக் கதையினை நன்கறியவோ, நாடக வளர்ச்சியை உணரவோ, நாடகப் போக்கினைப் புரிந்து போற்றவோ இயலாதுபோகும்;

---

1. Blending of the Western and Eastern or Tamilian Conception and modes of the dramas.

2. Opening 3. The Tempest.

ஏனெனில் நாடகம் கதை போன்று, பிறப்பு முதல் கூறுவ தன்று, இடையில் தொடங்குவதாகும். எனவே நடந்த நிகழ்ச்சிகள் இவை, நடந்த காலக்கதை இஃது என அறிய, நாம் செய்தி பலவற்றை அறிந்தாக வேண்டியுளது. இதனை நல்குவதே செய்திகளைத் தருவதாகும்.

3. முதற் காட்சியில் காணப்படும் செய்திகளும், நிகழ்ச்சிகளும், உறுப்பினரிடையே நிகழும் உரையாடலும் கொண்டு இந்த முறையில் வளர்ச்சியும் இன்னமுடிவும் கொண்டதாகும் இந்நாடகம் என்று அறுதியிடக்கூடும். இந்நாடகம் காதல்பற்றியதா? வீரம் பற்றியதா? நல்லோர் நலம் பெறுவரா? தீயோர் திருந்துவரா? துன்ப முடிபுடை நாடகமாக[1] அமையுமா? இன்ப முடிபுடை[2] நாடகமாகுமா? என்பதெல்லாம் ஆசிரியர் ஆங்காங்கே அமைத்துச் செல்லும் உட்குறிப்புகள் கொண்டே உணரமுடியும்; நாடக நிலையினையும் தெளியலாகும்.

மனோன்மணீய நாடகத் தொடக்கம் இம் முத்திறமும் கொண்டு முதன்மை பெற்று விளங்குகிறது. நாடகத் தொடக்கம் என்று இரண்டு மூன்று காட்சிகள் வரை இழுத்துச் செல்லும் நிலையில்லாது, முதற் காட்சியே முக்கிய செய்திகளையும், நிகழ்ச்சிகளையும், உறுப்பினர்களையும் கொண்ட உயரிய ஒப்பற்ற நாடகத்தொடக்கமாக அமைகிறது. வரையறையில்லாது பரந்த இடத்தில் மனம்போன போக்கில் ஆடுவது நாட்டியமாகாது; குறித்த அரங்கில் குறிப்பிட்ட முறையில் ஆடுவதுதான் நாட்டியமாகும். எல்லையொன்று மில்லாது இட்டப்படி ஆடுவது கிரிக்கெட் அல்லது டென்னிஸ் ஆட்டமாகாது; இத்தனையடி நீளம், அகலம் என்ற வரையறை கொண்ட குறுகிய இடத்தில் ஆடுவதுதான் கிரிக்கெட் டென்னிஸ் ஆட்டமாகும்.

வரையறைக்குட்பட்டு, குறுகிய எல்லையில் நின்று தம் திறமனைத்தையும் காட்டுவதில்தான் புலமை யுளதே யன்றி, கட்டுப்பாடில்லாது மனம் போனபடி தொடங்கும் நிலையில் ஆன்ற புலமை அமையுமாறில்லை; முதற் காட்சியிலேயே குறுகிய அளவில் குறைந்த அடிகளில் பாத்திர அறிமுகம், நாடகப் போக்கு, செய்தி விளம்பல், பாத்திரப் பண்பு போன்ற அனைத்தையும் அடக்கிக் கூறுவதில்தான் ஆற்றல் அமைந்துளதே தவிர; இரண்டு—மூன்று காட்சிகள்வரை நீட்டிச் சென்று, வாய்ப்பினைப் பெருக்கிக்கொண்டு இன்ன லின்றி எல்லாவற்றையும் எடுத்தியம்பிவிடுவதில் ஏற்றமும் இல்லை; இனிமையும் இல்லை. அதில் ஆற்றல் அமைவதாக ஆன்றோரும் கருதார்.

1. Tragedy. 2. Comedy.

இம்முறையில் பேராசிரியர் சுந்தரனார் வாய்ப்பில்லாத சூழ்நிலையில்—வசதி குறைந்த நிலையில் 154 அடிகளில் ஒன்றையும் விடாது, அனைத்தையும் உணர்த்திச் சொல்கிறார். முதற் காட்சியிலேயே முழுவதையும் கூறிய நாடகாசிரியர் திறம் வியந்து செயல் மறந்து பாராட்டற்பாலது.

உறுப்பினர் அறிமுகம்[1]: இந்நாடகத்தில் ஏற்றமும் தோற்றமும் பெற்ற, இன்றியமையாப் பாத்திரங்கள் ஜீவகன், சுந்தர முனிவர், குடிலன், மனோன்மணி ஆகியோராவர். இந் நால்வரில் மூவரை முறையே அறிமுகப்படுத்தி, நாடகத் தலைவியாய மனோன்மணியை மட்டும் நம்முன் கொணராது, அவளைப்பற்றிய இன்றியமையாச் செய்திகளை மட்டும் எடுத் தியம்பி, அவளை ஆவலோடு எதிர்நோக்கி இருக்குமாறு செய்துவிடுகின்றார் ஆசிரியர்.

எடுத்த எடுப்பிலேயே சுந்தர முனிவர்பால் சிந்தை யொன்றச் செய்கின்றார். விழவாணை வீதியில் களிறுகள் பிளிறு பேரொலியையும், குதிரைகள் குளம் பொலியையும், முரசங்கங் களின் முழக்கத்தையும் விஞ்சும் வண்ணம் 'சுந்தர முனிவரே வணக்கம், வணக்கம்' எனும் உள்ளத்தினின்று உந்தியெழும் ஒலியே ஓங்கி நிற்குமாறு மக்களும் பிறரும், எள்விழ இடமில்லாது கூடிக் குழுமி, ஏற்றியும் போற்றியும் வருவதாகக் காட்டுகின்றார். முனிவர் என்று சொன்னாலே கல்லும் கனிந் துருகுமாம்! பின் அவ் அற அண்ணல்பால் மக்கள் பத்தி கொள்வதற்குக் கேட்பானேன்? இன்னணம் முனிவர் திறம் கூறி, நம் ஆவலைத் தூண்டிப் பின் நேரே நம்முன் கொணர் கிறார். இளவரசி மனோன்மணிபால் எல்லையில் நல்லன்பு கொண்டவர், குடிலன் செய்யும் படிறுகள் அனைத்தும் உணர்பவர், வழுதியையும், மணியையும் மக்களையும் காப்பதில் கருத்துடையவர் என்பதும் இவர் குணங்களென அறிகிறோம்.

ஜீவக வழுதியை எவ்வித முன்னுரையுமின்றி முக்கியத் துவமும் கொடுக்காது முனிவரை வணங்கி வரவேற்க வந்தணைந்ததாகக் கூறிவிடுகின்றார். முனிவரை இறைஞ்சி ஏத்திய பின்றை, தாம் புதுவதாக எழுப்பிய அரண் கண்டு ஆசியருளுமாறு வேண்டிக் குடிலனை அரண் திறம் கூறுமாறும் செய்கிறான். இவற்றில் எவையேனும் உறுதியுளதோ (அல்லா துறுதியுளதோ?) என முனிவர் கேட்டதும், உட்குறிப்பு உணராது கலக்கமுற்றுக் குறையினைச் சுட்டின் நிறை செய்வதாக நவில்கின்றான். இதனால் மன்னன் உள்ள உறுதியோ, குறிப்பறியும் திறமோ, உரமான நெஞ்சமோ இல்லாதவன் என்பதும், முனிவரிடத்துப் பேரன்பும் பெரு மதிப்பும் உடையவன் என்பதும், அமைச்சன் வழி யொழுகும்

1. Introduction of characters.

புறச் சிறப்பில் ஈடுபடும் இயல்பினன் என்பதும் காணக்கிடக்கின்றன.

குடிலனையும் ஆசிரியர் எவ்விதச் சிறப்புரையுமின்றி நேரே அறிமுகப்படுத்திவிடுகிறார்; அரணது திறம் கூறு முறையில் அறிமுகப்படுத்துகிறார். ஏனையோரெல்லாம் சில சொல்வி அமைய, இவன் மட்டும் கடல் மடை விண்டென 43 வரிகளில் ஆரவார உரை நிகழ்த்துகின்றான். பயனில சொல் பாராட்டும் பதர் எனவும்,

நெஞ்சில் உரமும் இன்றி
    நேர்மைத் திறமும் இன்றி
வஞ்சனை செய்வாரடி—கிளியே! அவர்
    வாய்ச் சொல்லில் வீரரடி

என்பதற்கிணங்க வாய்ச்சொல் வீரனாகவும் வஞ்சகனாகவும் எண்ணுமாறு அமைகின்றான். (நெஞ்சில் உரமில்லாமையால் நேர்மையுமில்லை, நேர்மை இல்லாமையால் நெஞ்சுரமும் அமைந்திலது; இரண்டும் இல்லாமையால் வஞ்சனையே செய்து வாழ்வர்; அவ்வஞ்சனையை மறைக்க வாய்ச்சொல் விளம்பித் திரிவர்). வஞ்சகனாக விளங்கினும் அவனது அறிவுத் திறனையும் சொல்லாற்றலையும் வியவாமல் இருத்தற்கில்லை. இறுதியில் தன்னுள் இயம்பும் தனி மொழியில்[1] 'நங்காரியம் ஐயம்' என்பதினின்று இவன் சூழ்ச்சி செய்து வருவதும் இவன் செய்த முதற் சூழ்ச்சி (மதுரையினின்றும் நெல்லைக்குத் தலைநகரை மாற்றியமை) வெற்றி பெற்றதும் அறிய முடிகிறது.

இத்துணை பேரையும் அறிமுகப்படுத்தியவர், மனோன் மணியை நம்முன் கொணரவே இல்லை. முனிவர் வந்தும் வராததுமாக,

சுகமே போலும் மனோன்மணி?
உன்னையும் உன்குலத் துதித்தநம் மனோன்மணி
தன்னையுஞ் சங்கரன் காக்க!
நின்புதல் வியையான் காணநே சித்தேன்
அத்திரு வுறையும் அப்புறம் போதற்கு
ஒத்ததா மோஇக் காலம்?

என்றெல்லாம் வினவுவது கொண்டு படிப்படியே நமக்கு இளவரசியைக் காணும் பேராவல் மீதூறுகிறது. யாவரும் போற்றும் முனிவரே இவள்பால் இத்துணைப் பேரன்பு பூண்டுள்ளார் எனில், அவளைக் காண அவாவுவது இயல்பே யன்றோ? ஒருவருடைய ஏற்றம் கேட்ட மாத்திரத்தில் அவருடைய தோற்றம் காண விழைவது இயல்புதானே!

(தொடரும்)

1, Soliloquy.